2006,ஆவணி 15-30

பக்கங்கள் 12

விலை 12/=

Registered as a News Paper in Srilanka.

மாதமிரு மலர்

# தமிழ் அலை

*The Tamil Alai.*

இப்பொழுது மாதமிருமுறை வெளிவருகின்றது தமிழ் அலை

அலை 14

இதழ் 02

SRILANKA NATIONAL TAMIL NEWS PAPER













யதார்த்தம் உணரப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்படும் வரை ஓயாத அலையிது.

# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது



தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைச் செயலகம் (09.08.2006) காலை 9 மணி 4 நிமிடம் தொடக்கம் 11 மணி 4 நிமிடம் வரையிலான சுப முகூர்த்த வேளையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழாவில் சமயப் பெரியார்களும் மற்றும் ஊடகவியளாளர்களும் கலந்து கொண்டனர். தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பானது அரசியல் மற்றும் இராணுவ கட்டமைப்பைக் கொண்ட அமைப்பாகும். இவ் அமைப்பிற்கு திரு கருணா அம்மான் அவர்கள் தலைவராகவும் இவ்வரசியல் கட்சியின் செயலாளராக திருமதி எஸ். பத்மினி அவர்களும் விளங்குகின்றார்கள்.

திரு. கே. மகேஸ் அவர்கள் வரவேற்பு உரையை நிகழ்தினார். அதனைத் தொடர்ந்து தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிர் நீத்த அனைவருக்காகவும் மற்றும் உயிர் நீத்த அனைத்துப் பொது மக்களுக்காகவும் 1 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்துமத குருவான சிவ ஸ்ரீ. சிறிக்காந்தக் குருக்கள் ஐயா அவர்களும் பௌத்த மத குருவான வணக்கத்துக்குரிய உபத்தன்னே சுமண தேரர் அவர்களும் மற்றும் இஸ்லாமிய மத குருவான மௌலவி எஸ். ரி.எம். இர்பான் றிஷார்தின் அவர்களும் மங்கள விளக்கை ஏற்றி விழாவைத் தொடக்கி வைத்தவுடன் ஆசி உரையையும் வழங்கினார்கள். திரு. தூயவன் அவர்கள் அரசியல் கட்சியின் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார். தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான ஈ. பிரதீப் அவர்கள் அக்கட்சியின் அரசியல் பிரவேசத்துக்கான நோக்கங்களையும் செயற்பாடுகளையும் விளக்கிக் கூறினார். இறுதியாக திரு. ஏஸ். குணாளன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

**தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரவேசத்துக்கான நோக்கங்கள்**

01) இலங்கையில் உள்ள தமிழ் புத்திஜீவிகள் மற்றும் அரசியல் வாதிகள் அழிக்கபட்டதாலும் மேலும் மாற்றுக் கருத்துக் கொண்டோர் அச்சுறுத்தப்பட்டதாலும் ஒரு அரசியல் வெற்றிடம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பை தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகவே இந்த அமைப்பிற்கு தமது பங்களிப்பை ஆற்ற முடியுமென உண்மையிலேயே உணருகின்ற அனைத்து மக்களினதும் மற்றும் புலம் பெயர் சமூகத்தினதும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்டும்.
02) நாட்டில் தற்போது நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையினுள் சமரசப் பேச்சுவார்த்தை மூலம் ஓர் தீர்வைக்காணும் பொருட்டு கடின முயற்சி மேற்கொள்ளுவதற்கும் மேலும் இடையில் நின்று போன சமாதானச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதிக்கும் அவருடைய அரசாங்கத்திற்கும் சமாந்தரமான அல்லது வேறு வழியிலான பிரதிநிதித்துவத்தை வழங்கி உதவுவதற்கு.
03) உலகமயமாக்கலிற்கு ஏற்ப பயணிக்கவும் மேலும் நாட்டிலே சுபிட்சமான பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும் நாம் அனைவரும் கடந்ததை மறந்து எதிர்காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை இலங்கையின் பெரும்பாண்மை சமூகத்திற்கு எடுத்துரைப்பதற்கு.
04) இலங்கையின் தற்கால அரசியல் நெருக்கடிகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வை சமாதான வழிமுறைகள் மூலம் காணும் நோக்குடனான எமது ஜனநாயக முறையிலான அரசியல் பங்களிப்பை அரசாங்கத்தையும், மக்களையும், புலம்பெயர் சமூகத்தையும் மற்றும் சர்வதேச சமூகத்தையும் அங்கிகரித்து ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு.
05) நாட்டிலுள்ள அனைத்துப் பாகங்களிலும் வறுமையும், எழுத்தறிவின்மையும், இல்லாதொழித்து நாட்டிலே ஒரு சுபீட்சமான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு.
06) எங்களுடைய கருத்துக்களைப் பரப்புவதற்கு, எங்களுடைய அமைப்பின் செயற்பாட்டை முன்னேற்றுவதற்கு, மற்றும் காரியாலயங்களைத் திறந்து அச்சமின்றி ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு.
07) எங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசிடமிருந்து அரிய உதவிகளையும், ஒத்தாசைகளையும் இலங்கை அரசைப் பெறச்செய்வதற்கு நாங்கள் முயற்சிப்போம்.

## விமானப்படை விமானிகளையும், இராணுவ உயர் அதிகாரிகளையும் இலக்கு வைத்து பிரபா குழுவின் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளனர்.



இலங்கை விமானப்படையின் விமானிகளையும், இராணுவத்தின் உயர் அதிகாரிகளையும் இலக்கு வைத்து 20இற்கும் மேற்பட்ட பிரபா குழுவின் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை விமானப்படையின் கிபீர்,ஜெட் ரக குண்டு வீச்சு விமானங்களினால் அண்மைக்காலத்தில் பிரபா குழுவுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாலும், அண்மைக்கால சில இராணுவ நகர்வுகளின் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாவும் அவற்றுக்கு பதிலடியாக விமானிகள் மீதும், இராணுவ உயர் அதிகாரிகள் மீதும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடாத்த பிரபா குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அரசாங்கம் விமானப்படை விமானிகளினதும், இராணுவ உயர் அதிகாரிகளினதும் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதுடன் பிரபா குழுவின் தற்கொலைக் குண்டு தாரிகளை கைது செய்யும் நடவடிக்கையையும் முடுக்கிவிட்டுள்ளது.

## அரசு, பிரபா குழு மோதல் தீவிரமடைந்தால் கண்காணிப்புக்குழு பணியை கைவிடும் குழுவின் பதில் பேச்சாளர் எச்சரிக்கை



இலங்கை அரசாங்கத்திற்கும் பிரபா குழுவினருக்குமிடையிலான தற் போதைய மோதல் தீவிரமடைந்தால் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது பணியை கைவிட நேரிடலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளது. வெருகல் பகுதியில் தற்போது காணப்படும் சூழ்நிலை குறித்து சுட்டிக்காட்டி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் ரொபேட் நெல்சன் இதனை தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கமும் பிரபா குழுவினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார். இதேவேளை, பின்லாந்தையும் டென்மார்க்கையும் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தமது கண்காணிப்பாளர்களை விலக்கிக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய சக்தி வேலைத்திட்டத்தில் மட்டக்களப்பில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்




வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பிற்கான அபிவிருத்திப் பணிகள் 29.07.2006அன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வைபவத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதை அபிவிருத்தி, மின்சாரம், சுகாதாரம், போக்குவரத்து. வீடமைப்பு, நீர்ப்பாசனம், குடிநீர் வழங்கல், தொலைத்தொடர்பு, எல்லைக்கிராமங்களின் பாதுகாப்பு என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

## மூதூர் தாக்குதலில் பிரபா குழுவிற்கு பெரும் இழப்பு, பிரபா குழுவை வழிநடாத்திய புனிதன் உட்பட 152பேர் உயிரிழப்பு

02.08.06 அதிகாலை பிரபா குழுவினரால் மூதூர் நகரில் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள் பிரபா குழுவுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. பிரபா குழுவினரை சில இடங்களில் உள்ளே வரவிட்டு முப்படையினரும் மேற்கொண்ட பதிலடித் தாக்குதலில் பிரபா குழுவுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இரு தினங்களாக இடம்பெற்ற மோதலில் பிரபா குழுவின் தரப்பில் 152பேர் கொல்லப்பட்டுள்ளதாக, உறுதியான தகவல்கள் கூறுகின்றன. 02.08.06 நடைபெற்ற மோதலில் 96 பிரபா குழு உறுப்பினர்களும், மறுநாள் மாலை வரை இடம்பெற்ற மோதலில் 56 பிரபா குழு உறுப்பினர்களும் கொல்லப்பட்டதாக பிரபா குழுத் தரப்புச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எமது மூதூர் செய்தியாளர் தெரிவித்தார். பிரபா குழுவின் தரப்பில் கொல்லப்பட்டவர்களில் கணிசமான பெண் போராளிகளும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மூதூர் தாக்குதலை வழிநடாத்திய பிரபா குழுவின் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் புனிதனும் படையினரின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இவர் அடங்களாக கொல்லப்பட்ட பிரபா குழு உறுப்பினர்களின் சடலங்கள் வாகரைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது. மூதூர் தாக்குதலில் சுமார் 150இற்கும் மேற்பட்ட பிரபா குழு உறுப்பினர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## பிரபா குழுவின் பணிச்சங்கேணி முகாம் மீது அதிரடித் தாக்குதல், 11பேர் பலி, மூவர் கைது, முகாம் முற்றாக தகர்ப்பு




பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியான பணிச்சங்கேணியிலுள்ள பிரபா குழுவின் பிரதான முகாம் மீது 03.08.06 அதிகாலை 4மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் அதிரடித்தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. 03.08.06 அதிகாலை பிரபா குழுவின் முகாமைச் சுற்றிவளைத்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அவர்களின் முன்னரங்கு காவல் நிலைகளை உடைத்துக் கொண்டு முன்னேறி பிரபா குழுவின் முகாம் மீது கடும் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் எதிர்பாராத இத்திடீர்த் தாக்குதலினால் பிரபா குழுவினர் நிலைகுலைந்து போனார்கள் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இத்தாக்குதலில் பிரபா குழுவின் தரப்பில் 11பேர் கொல்லப்பட்டதுடன் மூவர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆதிமைந்தன் (கந்தலிங்கம் சுதர்ஷன் வயது16), திருப்பரன் (வைரமுத்து ரவி வயது20), கலிவேந்தன் (மோகன் வயது20) சிறைப்பிடிக்கப்பட்டவர்களாவர். இத்தாக்குதலில் பிரபா குழுவின் பணிச்சங்கேணி முகாம் முற்றாகத் தகர்க்கப்பட்டதுடன் அங்கிருந்த பெருமளவான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## மீண்டும் பேச்சைத் தொடங்குமாறு இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தல்

இலங்கையில் வன்முறை மோதல்கள் அதிகரித்துக்கொண்டே சென்றால், அரசுக்கும் பிரபா குழுவினருக்கும் இடையிலான் போர் நிறுத்த உடன்பாடானது அர்த்தமில்லாமல் போய்விடும். எனவே, அரசியல் ரீதியான பேச்சுவார்த்தையைத் தொடங்க சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள் அதன் மூலம் சமாதான முன்முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லுங்கள் என்று இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது. அதே நேரத்தில், இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை காக்கப்பட வேண்டும் என்பதையும் இந்திய அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது. போர் மூலம் தீர்வுகாண்பது தமது நோக்கமல்ல என்றும், இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதே தமது நோக்கம் என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

# அலை

ஆவணி 15-30, 2006

இல,39. கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு
மின்னஞ்சல்: tamilalainews@yahoo.com
இணையத்தளம்: WWW.tamilalai.org
தொலைபேசி: 0652222102

*அன்புடன் வாசகர்களுக்கு, மீண்டும் மறு தமிழ் அலையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி*

## சகோதரத்துவத்தைப் பலப்படுத்தி பயங்கரவாதத்தைத் தோற்கடிப்போம்.

எமது மண்ணில் மீண்டுமொரு தடவை பயங்கரவாதம் சகோதரத்துவ உறவுடன் மோதுகின்றது கிழக்கில் மூதூர்ப் பகுதியில் பிரபா குழுவினர் மேற்கொண்ட வலிந்த தாக்குதல் மூலம் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம், தமிழ் உறவுகள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். கிழக்கில் சகோதர உறவை சீர்குலைத்து பல உயிர்களைக் காவு கொண்டு தம்மை ஸ்திரப்படுத்தவும், தமது நீண்ட நாள் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தவும் தமது பயங்கரவாத செயற்பாடுகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

உலக யுத்த வரலாற்றில் இதுவரை யாரும் பணயமாக வைக்காத நீரை ஆயுதமாகக் கொண்டு நாட்டில் நெருக்கடிமிக்கதொரு சூழ்நிலைக்குத் தூபமிட்டனர் பிரபா குழுவினர். இது தொடர்பாக பொதுநல அமைப்புகளும், மூவின மக்களும் எவ்வளவும் வேண்டியும் நீரைத் திறந்துவிட முன்வரவில்லை. மக்கள்தான் நீரைத் தடுத்தனர் என்று கூறி அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள அப்பாவிகளான மக்களையும் இனப்பிரச்சினையில் இழுத்தனர்.

இப்பிரச்சினை பூதாகரமாகி இராணுவ நடவடிக்கையில் முடிய இதற்கு தமது பதிலடி எனும் போர்வையில் முதூரில் தாக்குதல் தொடுத்து முஸ்லிம் மக்கள் மீதான இனச் சுத்திகரிப்புக்கு காரணம் தேடினர். பல பெறுமதிமிக்க உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டு பல்லாயிரம் முஸ்லிம் மக்கள் அகதிகளானதுதான் பிரபா குழுவின் சமீபத்திய சாதனை.

இதுபோல படையினரின் தொடர் எறிகணைத் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்களினால் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பல தமிழ் மக்கள் உயிரிழந்ததுடன் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களும் தம் உயிர்களைக் காக்க அகதிகளாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களும், அவலங்களும் தொடர் கதையாகின்றது. இம் மக்கள் அடிப்படை வசதியின்றி உறவுகளைப் பிரிந்து அனுபவிக்கும் துயரங்கள் சொல்லில் அடங்காதவை. தம் உறவுகளின் நிலைமை என்னவென்று தெரியாமல் பரிதவிக்கும் இக் கொடுமைகள் தொடர அனுமதிக்கக் கூடாது.

ஒரு சகோதரரத்துவ இனத்திற்கு எதிராக ஒரு பயங்கரவாதக் குழு கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளுக்கு மண்ணில் சகோதரத்துவ உறவை சிதைத்து விடுமோ என்ற நியாயமான அச்சம் எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. பிரபா குழுவின் பயங்கரவாதச் செயற்பாடுகளினால் எம் மண்ணின் சகோதரத்துவ உறவு சிதையுமானால் அதுவே பயங்கரவாதத்தின் மிகப்பெரிய வெற்றியாக அமைந்துவிடும்.

இதேபோன்று பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் அப்பாவிகளான தமிழ் மக்களும் இலக்காக்கப்பட்டால் இதனால் தமிழ் மக்கள் இந்நடவடிக்கை தமக்கெதிரானது என எண்ண தலைப்பட்டால் அதுவும் பயங்கரவாதத்திற்கான வெற்றியாகப் போய்விடும்

இது விடயத்தில் அரசாங்கமும், மூவின சகோதரத்துவ மக்களும் விழிப்புடனும், ஒற்றுமையுடனும் செயலாற்ற வேண்டிய தருணம் இது. அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் உறுதியாக இருக்கும் அதேசமயம் அந்நடவடிக்கையில் பொதுமக்கள் இலக்காகாமல் பாதுகாக்கவேண்டியது மிகவும் அவசியம்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் இந் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் இப்போது பாரிய பொறுப்புள்ளது. சகோதரத்துவ உறவை பலப்படுத்தி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க அனைத்து இன மக்களும் ஓரணியில் திரளவேண்டிய காலம் கனிந்துள்ளது. பிரபா குழுவின் பயங்கரவாதச் செயற்பாடுகள் முஸ்லிம், சிங்கள இனச் சகோதரர்களுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் பெரும் ஆபத்தாகவும் பெரும் இடையூறாகவும் உள்ளது.

ஆக பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க சகோதரத்துவ உறவைப் பலப்படுத்துவோம்.

நன்றி
ஆசிரியர்.

# சிங்கள மக்களும், அரசியல் கட்சிகளும் பிரபா குழுவுக்கு அப்பால் பார்வையைச் செலுத்தி தமிழ் மக்களின் நம்பிக்கையைச் சம்பாதிக்கவேண்டும்.

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா அம்மான்

**சிங்கள மக்களும், அரசியல் கட்சிகளும் பிரபா குழு என்பதற்கப்பால் தமது பார்வையைச் செலுத்தி தமிழ் மக்களை நம்பிக்கையைச் சம்பாதிக்க வேண்டும். இதுவே பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான உறுதியான வழிமுறைகளாகும் என கருணா அம்மான் தெரிவித்தார்.**

அரசும் புலிகளும் கைச்சாத்திட்ட ஒஸ்லோ உடன்படிக்கைக்கான அக்கூட்டத்தில் நான் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு அதை ஏற்றுக் கொண்டேன். அதைத்தொடர்ந்து துரதிஷ்டவசமாக பிரபாகரன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்காது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஓர் போர்வையாகப் பயன்படுத்திக்கொண்டு தனித் தமிழ் ஈழத்தையே தொடர்ந்து நாடி நின்றார்.

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க அவர்களை தோல்வி அடையச் செய்ய வேண்டும் என புலிகள் கருதியது ஏன்?

**பதில்:** இது தெளிவானதோர் விடயமல்லவா? புலிகளால் சவாரி செய்யப்பட்டு பின்னர் விழுங்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட சிங்களத் தலைவர்கள் வரிசையில் ரணில் விக்ரமசிங்க அவர்களும் ஒருவர். ஜனாதிபதி பிறேமதாசா, ஜனாதிபதி குமாரதுங்க, பிரதமமந்திரி ரணில் விக்ரமசிங்க. பிரதமர் ராஜீவ்காந்தியையும் இப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். பிரபாகரனில் நம்பிக்கை வைத்த பல தமிழ்த் தலைவர்களுக்கும் இதே நிலைமைதான் ஏற்பட்டது. புலிகளுக்கு கடும்போக்கைக் கொண்ட ஓர் சிங்கள ஜனாதிபாயே தேவை. காரணம் அப்போதுதான் அவருடன் நடாத்தப்படும் எந்தவோர் பேச்சுவார்த்தையும் பலனளிக்காது என்ற ஓர் படத்தை தமிழர்களுக்குக் காட்டமுடியும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கு எமது பிரச்சனைகளைத் தீர்க்கும் நிலைப்பாடு உள்ளூர வுள்ளது. இந்த நிலைப்பாட்டை புலிகள் தவறாகக் கணித்து விட்டார்கள்.

**கேள்வி:** உங்களுடைய உறுப்பினர்கள் இலங்கை இராணுவ முகாம்களுக்குள் போய் வருவதாக அறிக்கைகள் கிடைத்துள்ளதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது. நீங்கள் இதற்கு என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: முழு அபத்தம்! இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எங்களுடைய உறுப்பினர்களை எவ்வாறு இனம் கண்டது? அண்மையில் இராணுவத்தலைமையகத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவரை உட்படுத்தி கருவிலே உள்ள சிசுவையும் உடந்தையாக்கி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத்



**புலிகள் நிதி திரட்டு வதற்காக கிரெடிட் காட் மோசடி, கறுப்புப் பணம்,போதை வஸ்து கடத்தல்,ஆட்கள் மற்றும் ஆயுதங்கள் கடத்தல் போ்ன்ற அவர்களுடைய சட்டவிரோத நடவடிக்கைகளை அதிகரிப்பர். புலிகள் மாபியாவாக (MAFIA) உருவெடுத்துள்ளார்கள.**

தாக்குதலை புலிகளுக்கு இராணுவத்துடன் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் குறிப்பிடமுடியுமா?

**கேள்வி:** ஜேவிபியினரும், ஜாதிக்க ஹெலஉறுமயினரும் கூட்டுக்கட்சிகளாக இருக்கும போது ஜனாதிபதி ராஜபக்ஸ அவர்களால் தமிழர்களுக்கு ஓர் சாத்தியமான தீர்வை வழங்க முடியுமா?

**பதில்:** ஜனாதிபதி ராஜபக்ஸ அவர்கள் நிலைமையை புரிந்து அதனை ஏற்றுக்கொண்டு அந்த நிலைமையை வித்தியாசமான தொன்றாக பாசாங்கு செய்ய முயலாது அந்நிலைமைக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளும் ஒருவர் என்பதையும் தேசப்பற்றாளன் என்பதையும் நாங்கள் நம்புகின்றோம். தற்போதைய உள் ஊர் மற்றும் சர்வதேச நிலைமைகளின்படி தமிழர்களுக்கான சாத்திய மானதோர் தீர்வானது சிங்களவர்களுக்கு அதிக நன்மை பயக்கும் என்பதை அவர் நன்கு தெரிந்துவைத்துள்ளார். ஜேவிபியினரும் ஜாதிக்க ஹெல உறுமயினரும் புலிகளிலும் அவர்களுடைய நோக்கங்களிலும் நம்பிக்கையற்ற காரணத்தினால் அதிகார பகிர்வில் அக்கறை காட்டுகின்றனர். பெரும்பாலான சிங்கள மக்களும் இதே அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். சிங்கள மக்களும் அவர்களுடைய அரசியல் கட்சிகளும் புலிகள் என்றதற்கு அப்பால் பார்வையை செலுத்தி தமிழ் மக்களுடைய நம்பிக்கையை சம்பாதிக்க வேண்டும்.

**கேள்வி:** இலங்கை ஆயுதப் படையுடன் உங்களுடைய உறவு எப்படி?

**பதில்:** எங்களுக்கு அவர்களுடன் எந்தவொரு தொடர்பும் இல்லை.

**கேள்வி:** ஜனாதிபதி ராஜபக்ஸ அவர்கள் பதவிக்கு வந்ததன் பின் உங்களுடைய உறுப்பினர்கள் யாராவது இலங்கை இராணுவப் படையினரால் கொல்லப் பட்டுள்ளனரா?

**பதில்:** இல்லை. ஜனாதிபதி ராஜபக்ஸ அவர்கள் பதவிக்கு வர முன்னரும் கூட எங்களுடைய எந்தவொரு உறுப்பினர்களும் இலங்கை இராணுவப் படையினரால் கொல்லப்பட வில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை இராணு வப்படையை நாங்கள் எதிர்க்க வில்லை.

**கேள்வி:** ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது புலிகளின் நிதி திரட்டும் நடவடிக்கைகளில் எப்படியான பாதிப்பை விளைவிக்கும் என நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

**பதில்:** பகிரங்கமான சட்டபூர்வ நிதி திரட்டலும் மற்றும் பகுதியான சட்டபூர்வத்தைக் கொண்ட நிதி திரட்டலும் கடுமையான பாதிப்புக்குள்ளாகும். இனியும் தமது பணத்தைப் பங்கிடும்படி புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பலவந்தப்படுத்தப்பட முடியாது. எவ்வாறு இருப்பினும் புலிகள் நிதி திரட்டு வதற்காக கிரெடிட் காட் மோசடி, கறுப்புப் பணம், போதை வஸ்து கடத்தல், ஆட்கள் மற்றும் ஆயுதங்கள் கடத்தல் போன்ற அவர்களுடைய சட்டவிரோத நடவடிக்கைகளை அதிகரிப்பர். புலிகள் மாபியாவாக (MAFIA) உருவெடுத்துள்ளார்கள். இவர்கள் இப்போது கூடிய அளவு மாபியா நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர்.

**கேள்வி:** புலிகள் நீங்கள் உட்பட 2002ஆம், ஆண்டு சமாதானச் செயற் பாட்டினுள் பிரவேசித்த போது கைச்சாத்திடப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தை ஒப்பந்தத்திற்கு உண்மையாக நடந்துள்ளீர்களா?

**பதில்:** பிரபாகரன் சமாதான செயற்பாட்டினுள் உட்பிரவேசித்த வேளையில் நிட்சயமாக அவரிடம் உண்மையிருக்கவில்லை. தமிழீழத்தை அடைவதற்கு புலிகளை தயார் செய்வதற்கு அவருக்கு ஐந்து வருட இடைவேளை தேவைப்பட்டது.

(தொடரும்....)

# தண்ணீருக்காய் ஒரு யுத்தம்.
# பலமாய் மூக்குடைக்கப்பட்ட பிரபா குழு.

உத்தமன்

சமகால இலங்கையின் அரசியல், இராணுவ அரங்கில் பெரும் வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்து மட்டுப்படுத்தப்பட்ட யுத்தம் ஒன்றிற்கு காரணமாய் இருந்த மாவில ஆறு அணைக்கட்டு 08.08.2006 அன்று மாலை திறக்கப்பட்டுள்ளது. 19 நாட்களாக மறிக்கப்பட்டிருந்த இவ் அணைக்கட்டு மீண்டும் திறந்துவிடப்பட்டதனால் அப்பகுதி மக்களும், நிலங்களும் பூரிப்படைகின்றன. இவ்விவகாரம் பெரும் மோதலுக்கு வழிவகுத்து விடுமோ என்று அஞ்சிய மக்களும் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். ஆனால் இவர்களின் நிம்மதி தற்காலிகமானதா? நிரந்தரமானதா? என்பதைக் காலம்தான் கூறவேண்டும்.

மனிதாபிமான அடிப்படையிலும், தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நான்கு வார காலத்திற்குள் நிறைவேற்றுவதாக நோர்வேத் தரப்பு இணக்கம் தெரிவித்திருந்தமையினாலும் தாமே அணைக்கட்டைத் திறந்ததாக பிரபா குழு கூறுகின்றது. ஆனால் இதனை அரசாங்கம் வன்மையாக மறுத்துள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்காக பேசவல்ல அமைச்சருமான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல விமானப் படையினரின் துல்லியமான விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து படையினர் அப் பகுதியை தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அரச பொறியியலாளர்கள் மூலம் அணைக்கட்டைத் திறந்ததாகக் கூறினார்.

மனிதாபிமான (?) அடிப்படையில் அணைக்கட்டைத் திறந்ததாக பிரபா குழு கூறுகின்றனர். உண்மையிலேயே மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் இதனைத் திறப்பதாக இருந்தால் அவ்வணைக்கட்டை மூடியிருக்கவே தேவையில்லை மட்டுமன்றி இவ்வணைக்கட்டை மூடியதனால் சுமார் 35,000 மக்களும் 15,000 ஏக்கர் விவசாய நிலங்களும் வெயிலில் வறண்டபோது இம் மனிதாபிமானம் ஏன் வரவில்லை. மாவிலாறு தண்ணீருக்காய் ஒரு யுத்தமும், பல உயிர்களும் இழக்கப்பட்டிருக்க வேண்டிய தேவையில்லையே. தண்ணீரைத் திறந்து விடுமாறு அப்பகுதி மூவின மக்களும் பிரபா குழுவிடம் கெஞ்சியபோது எங்கே சென்றது இம் மனிதாபிமானம்.

இது மட்டுமல்ல நோர்வே தரப்பினர் நமது கோரிக்கைகளைக் குறித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்ற இணங்கியதாகப் பிரபா குழுவினர் கூறுகின்றனர். பிரபா குழுவின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியது நோர்வே அரசல்ல. இலங்கை அரசாங்கம்தான். இது விடயத்தில் இலங்கை அரசாங்கம் தமது நிலைப் பாட்டைத் தெளிவாகக் கூறிவிட்டது.

நீரைத் திறந்துவிடும் விடயத்தில் பிரபா குழுவின் எந் நிபந்தனைகளையும் ஏற்கப் போவதில்லை எனவும் இது விடயத்தில் நோர்வேயிற்கு எதுவித அதிகாரமும் இல்லை எனவும் அரசாங்கம் கூறியுள்ளது. இச் சர்ச்சைகள் இவ்வாறு தொடரும் அதேவேளை மாவிலாறு அணையை பிரபா குழு மூடியது எதற்காக? இதன் மூலம் தாம் நினைத்ததை அவர்கள் அடைந்து விட்டார்களா? என்பதுதான் சாதாரண மக்கள் மத்தியில் உள்ள வினாக்களாகும்.

சமீபகால இலங்கையின் நிலவரம் நிச்சயமற்றதொன்றாகவே உள்ளது. 2002ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையும், அதனைக் கண்காணிக்க நிறுவப்பட்ட இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் செயலிழந்து வருவதை அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. நாட்டின் நிலமை எவ்வாறு அமையுமோ என்ற அச்சம் கலந்த நிலையில்தான் 20.07.2006 அன்று மகாவலி நதியின் கிளை நதியான பிரபா குழுவின் பிரதேசத்தினூடாகப் பாயும் மாவிலாறு அணைக்கட்டின் மதகுகளை பிரபா குழுவினர் மூடினர்.

ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த நிலைமையை இச் சம்பவம் கொழுந்து விட்டெரியச் செய்தது. இவ்வணைக்கட்டை மூடியதனால் விவசாயத்தை தம் வாவாதாரமாகக் கொண்ட மூவின மக்களும் பதறினர். சேருவில, தெகிகந்த, நிலாப்பொல பகுதி சிங்கள மக்களும்,



தோப்பூர், கங்குவெளி , பகுதி முஸ்லிம் மக்களும். கிளிவெட்டி, பாரதிபுரம், நாராயண புரம், மல்லிகைத் தீவு, மீன்காமம், இருதயபுரம் போன்ற பகுதிகளிலுள்ள் தமிழ் மக்களும் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு ஆளாகினர்.

இம் மக்களுக்கு மாவிலாறு அணைக்கட்டினூடாக வரும் நீர்தான் குடிப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் மூல காரணியாக இருந்தது. இவ்வணைக்கட்டை மூடியதன் மூலம் அப்பகுதி மக்களின் வாயிலும், வயிற்றிலும் அடிக்க ஆரம்பித்தனர் பிரபா குழுவினர். இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினை தேசிய அளவில் முக்கியத்துவம் பெறலாயிற்று.

இவ்வணைக்கட்டைத் திறப்பதற்கு உதவுமாறு அரசாங்கம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரியதும் பொறியியலாளர்களும், கண்காணிப்பாளர்களும் அணைக்கட்டு இருக்கும் இடத்திற்கு செல்ல முயன்றபோதும் பிரபா குழுவினர் அதனையும் தடுத்தனர்.

மாவிலாறு நீர்ப் பிரச்சினை தேசிய அளவில் முக்கியத்துவம் பெற ஆரம்பித்ததுடன் சில அரசியல்வாதிகள் இதன் மூலம் அரசியல் லாபம் அடைய அப்பகுதிக்குச் சென்று அப்பகுதி மக்களின் இனக் குரோதத்தை தூண்டி வேறுவிதமான மோதலுக்குத் தூபமிட்டனர். அரசாங்கம் தொடர்ந்தும் கண்காணிப்புக் குழுவினர் ஊடாக நீரைத் திறந்து விடும் சமரச முயற்சியில் ஈடுபட்டது. ஆனாலும் பிரபா குழுவினர் இணங்கவில்லை. நீரைத் திறந்துவிட வேண்டும் என்றால் தம் பகுதி மீதான பொரளாதாரத் தடையை நீக்கல் உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதிமீது பொருளாதாரத் தடை விதித்ததினால் அப்பகுதியிலுள்ள தமிழ் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பது மறுக்கமுடியாது. அரசாங்கம் அப்பகுதிகளுக்கான நிவாரண உதவிகளை தடைசெய்தமையினாலும், அப்பகுதியிலுள்ள மக்கள் உணவு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளுக்குக் கூட கையேந்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் அனுப்பப்படும் நிவாரண உதவிகளையும், அத்தியாவசியப் பொருட்களையும் பிரபா குழுவினர் சுருட்டிக் கொள்கின்றனர் என்ற அரச தரப்பு வாதத்திலும் உண்மையில்லாமல் இல்லை.

இது இவ்வாறு இருக்க மாவிலாறு அணைக்கட்டைப் பிரபா குழுவினர் மூடியமையினால் எழுந்த பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது. பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிய நீர்ப் பிரச்சினை கைமீறிப் போவதாக அரசாங்கம் உணர்ந்தது. இதனால் மக்களின் அடிப்படை, மனிதாபிமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பது என ஜனாதிபதி தலைமையில் கூடிய பாதுகாப்புக் குழு முடிவு செய்தது.

**இப்பிரச்சினை இராணுவ நடவடிக்கை மூலம் மாவிலாறு அணைக்கட்டுப் பகுதியைக் கைப்பற்றி நீரைத் திறந்துவிடுவது எனும் முடிவுக்கு அரசாங்கம் வருமளவிற்கு வளர்ந்தது. நிலைமை இவ்வாறு விபரீதமாக மாறுமென உண்மையிலேயே பிரபா குழுவினர் எண்ணியிருக்கவில்லை.**

இதனைத் தொடர்ந்து இலங்கை விமானப் படையிர் கிபீர், ஜெட் ரக விமானங்கள் மாவிலாறு அணையை அண்டிய பிரபா குழுவின் நிலைகள் மீது தொடர்த் தாக்குதல்களை மேற்கொண்டன. இராணுவமும், கடற்படையும் அப்பகுதியிலுள்ள இனங்காணப்பட்ட பிரபா குழுவின் நிலைகள் மீது ஆட்லறி, எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. பதிலுக்கு பிரபா குழுவினரும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்ளலாயினர்.

இவ்வாறாக ஆரம்பித்த இப்பிரச்சினை இராணுவ நடவடிக்கை மூலம் மாவிலாறு அணைக்கட்டுப் பகுதியைக் கைப்பற்றி நீரைத் திறந்துவிடுவது எனும் முடிவுக்கு அரசாங்கம் வருமளவிற்கு வளர்ந்தது. நிலைமை இவ்வாறு விபரீதமாக மாறுமென உண்மையிலேயே பிரபா குழுவினர் எண்ணியிருக்கவில்லை. பிரபா குழுவினர் மாவிலாறு அணைக்கட்டை மூடியதனால் எழுந்த சூழ்நிலையை அரசாங்கம் வெற்றிகரமாக கையாண்டுள்ளதாகத்தான் எண்ணத் தோன்றுகின்றது. நீரைத் தடைசெய்தமை மனித உரிமை மீறல் என பிரச்சாரம் செய்த அரசு இத்தருணத்தைப் பயன்படுத்தி பிரபா குழுவின் சில முக்கிய



இலக்குகளைத் தாக்கியழிக்க முடிவு செய்தது. இதனடிப்படையில் கிளிநொச்சியில் பிரபா குழுவினர் புதிதாக நிர்மாணித்ததாக சந்தேகிக்கப்பட்ட விமான ஓடுபாதையையும், அங்குள்ள சில முக்கிய முகாம்களையும் விமானப்படையினர் தாக்கியழித்தனர்.

இது மட்டுமன்றி 29.07.2006 அன்று மட்டக்களப்பில் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மிக முக்கிய தளமான தேனகத்தின் மீது விமானப்படையின் கிபீர் ரக விமானங்கள் மிகத் துல்லியமாகத் தாக்குதல் நடாத்தின. அச்சமயம் தேனகத்தில் பிரபா குழுவின் முக்கிய தளபதிகளான பானு, ஜெயம் ஆகியோரும் அங்கிருந்தனர். இத்தாக்குதலில் 08பேர் கொல்லப்பட்டதாக பிரபா குழு கூறியபோதும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதனைவிட பன்மடங்கு அதிகம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இத் தாக்குதலினால் பிரபா குழுவினர் ஆடிப்போய் விட்டனர். ஏலவே மட்டக்களப்பில் மிகப் பலவீனமடைந்திருந்த பிரபா குழுவினரால் படையினரின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. மாவிலாறு அணைக்கட்டு விவகாரம் தமக்கு இவ்வளவு இழப்புக்களை ஏற்படுத்துமென பிரபா குழுவினர் கனவிலும் நினைக்கவில்லை. இது விடயத்தில் அவர்கள் நினைத்தது என்னவோ நடந்தது என்னவோ.

அரசாங்கம் நினைத்திருந்தால் முப்படையையும் பயன்படுத்தி சர்வதேச சமூகத்தின் உதவியுடன் ஒருசில தினங்களில் மாவிலாறு அணைக்கட்டைத் திறந்திருக்க முடியும் ஆனாலும் பிரபா குழுவின் உட்கட்டமைப்பையும், அவர்களின் முக்கிய நிலைகளையும் தாக்கியழிக்கவே அரசாங்கம் பொறுமை காத்ததாக சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுவதையும்

(09ம் பக்கம் பார்க்க)



# மூதூர் மக்கள் செ
# தொடரும் மக்களின் அவ ... ம்.

புலவன்



02.08.2006 அன்று புதன்கிழமை அதிகாலை 2:15 மணி, திருமலை மாவட்டம் மூதூர்ப் பிரதேச மக்களை தூக்கத்திலிருந்து தட்டி எழுப்புகின்றது பயங்கரவாத வெடியோசைகள். நாலாபக்கமும் எறிகணைச் சத்தம், தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள், மக்கள் செய்வதறியாது பதறுகின்றனர். நடுநிசி நேரம் என்ன செய்வது, எங்கு செல்வது ஒன்றுமே தெரியவில்லை மூதூர்ப் பிரதேச மக்களுக்கு. ஆனால் ஒன்றுமட்டும் புரிந்தது தம்மைச் சூழ்ந்து எமதூதர்கள் உள்ளனர் என்பதுதான்.

கடந்த இரு வாரங்களாகவே திருமலை மாவட்டம் பெரும் பதற்றத்திலும், அச்சத்திலும்தான் இருந்தது. மாவிலாறு அணைக்கட்டை பிரபாகுழு பலவந்தமாக மூடியதைத் தொடர்ந்து இவ்வச்சமான சூழ்நிலைக்கு வித்திடப்பட்டது. அணைக் கட்டைத் திறப்பதற்காக நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிய இலங்கை அரசாங்கம் சுமார் 35,000 மக்களுக்கும், 15,000 ஏக்கர் விவசாய நிலங்களுக்கும் தண்ணீரைத் திறந்து விடுவதற்கான மனிதாபிமான நடவடிக் கையாக ஒப்பரேஷன் வோட்டஷெட் எனும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது.

இரு தரப்பினரும் பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல், விமானப்படையின் தொடர் குண்டு மழையென திருமலைப் பகுதி போர் கால வேடம் பூண்டது. போர்க்கால குற்றவாளிகளாக பொதுமக்கள் மாற்றப்பட்டனர். நாட்கள் நகரநகர தாக்குதல்களின் வேகம் அதிகரித்ததனால் இந்நிலைமை நாட்டில் மீண்டும் ஒரு முழு அளவிலான யுத்தத்தைத் தோற்றுவித்து விடுமோ? என்ற நியாயமான பீதியை மக்கள் மனங்களில் விதைத்தது.

இவ்வாறான நிலையில்தான் 01.08.2006 அன்று திருமலைத் துறைமுகத்தை நோக்கி திடீரெனப் பிரபா குழுவினர் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். திருமலை துறை முகத்தை நோக்கி வந்துகொண்டிருந்த ஜெட்லைன் எனும் துருப்புக் காவிக் கப்பலை இலக்காகக் கொண்டு பிரபா குழுவினர் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டபோதும் துருப்புக் காவிக் கப்பல் தாக்குதலிலிருந்து தப்பியது. தாக்குதல் இடம்பெற்ற சமயம் ஜெட்லைன் துருப்புக் காவிக் கப்பலில் 854 படையினர் நிராயுத பாணிகளாக இருந்தனர்.

திருமலைத் துறைமுகத்தையும், கடற்படைத் தளத்தையும் இலக்குவைத்து பிரபாகுழுவினர் நடாத்திய தாக்குதலைத் தொடர்ந்து நிலைமை மிகவும் அபாயகரமான கட்டத்தை நெருங்கியது. இந்நிலையில்தான் மறுநாள் அதிகாலை (02.08.2006) பிரபா குழுவினர் மூதூர் மீது வலிந்த தாக்குதலை மேற்கொண்டனர். மூதூர் இறங்குதுறை, செல்வநகர், மகிந்தபுரம், பாலைநகர், தோப்பூர் ஆகிய பகுதிகளில் பிரபா குழுவினர் ஏக காலத்தில் கடுந் தாக்குதல் தொடுத்தனர். அத்துடன் தக்வா நகர், இக்பால் நகர், ஹபீப் நகர்,வட்டம், நெய்தல் கிராமம், பாலைநகர் ஆகிய பகுதிகளை இலக்குவைத்து பிரபா குழுவினர் தொடர் எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

அதிகாலை வேளையில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பிரபா குழுவினர் தாக்குதல் நடாத்த மக்கள் கதிகலங்கிப் போனர். மக்களின் குடியிருப்புக்களை இலக்குவைத்து எறி கணைகள் வீழ்ந்து வெடித்தன. கண் முன்னே கணவன், மனைவி பிள்ளைகளென உறவினர்களும் தாக்கு தலில் மடிய அவ்வதிகாலை வேளையில் எஞ்சியோர் தம் உயிர்களைக் காக்க கால்போன போக்கில் ஓடினர்.

விடிய விடிய பிரபா குழுவினரால் தாக்குதல் நடாத்தப்பட மக்கள் பாடசாலைகள், அரபுக் கல்லூரிகள், பள்ளிவாசல்கள் என பொது ஸ்தா பனங்களை நோக்கி தம் உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு விரைந்தனர். கணவனைக் காணாது மனைவியும், மனைவியைக் காணாது கணவனும், பிள்ளையைக் காணாது பெற்றோருமாக உறவுகள் தம் இரத்த சொந்தங்களை தேடித் துடித்தனர். என்ன நடந்தது என வெளியில் சென்று பார்க்க முடியவில்லை எங்கும் வெடியோசையும் மரண ஓலமுமே ஒலித்தது.

தம் உயிர்களைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையில் பொது இடங்களை நோக்கி விரைந்த மக்களின் நம்பிக்கையும் தகர்ந்தது. எறிகணைத் தாக்குதலிலிருந்து மருத்துவமனை, பாடசாலைகள், பள்ளிவாசல்கள் கூடத் தப்பவில்லை. காயமடைந்தவர்களுக்கான மருத்துவ வசதியில்லை. வரண்ட தொண்டைக்குத் தண்ணீர் இல்லை என்ன செய்வது? எங்கே போவது? அம் மக்களின் உள்ளங்களில் மரண பீதி நிரந்தரமாகக் குடிகொண்டது.

எனவே உயிர்களைக் காக்க தம் வாழ்விடங்களை விட்டு அகதிகளாக வெளியேற ஆரம்பித்தனர் மூதூர் மக்கள். சுமார் 42,000 மக்கள் 03.08.2006 அன்று மூதூரைவிட்டு கந்தளாய், கிண்ணியா, திருமலை நகரம் ஆகிய இடங்களை நோக்கி அகதிகளாக இடம்பெயர்ந்தனர். 02.08.2006 அன்று அதிகாலை தொடக்கம் மறுநாள் காலைவரை பிரபா குழுவினரால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக ஆகக் குறைந்தது 60ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட படுகாய மடைந்தவர்களின் எண்ணிக்கை 150ற்கும் மேல். இதனைவிட காணாமல் போனோர் பலநூறு பேர்.


தாக்குதல் நடாத்தியவர்களின் திட்டம் சத்தமில்லாமல் நிறைவேற்றப்பட்டது. மூதூர் மீதான பிரபா குழுவின் வலிந்த தாக்குதல் படையினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றவில்லை. இத் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பிரபா குழுவினருக்குக் கிடைத்த மேலதிக போனஸ்தான். மூதூர் மீதான பிரபா குழுவின் தாக்குதல் தற்காலிகமாக நடந்தேறியதொன்றல்ல.

நீண்ட கால நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கனகச்சிதமாக திட்டமேற்றலுடன்தான் நடாத்தப் பட்டுள்ளது. இத் தா...தலின் இலக்கு இலங்கை இரா...மோ, ...ரச நிலைக்கோ அல்ல. அங்...ள முஸ்லிம் மக்கள்தான். மூ...ல் நடாத்தப்பட்ட தாக்குதலை..., தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளையும் நன்கு கூர்ந்து நோக்கும்போது பல உண்மைகள் புலப்படும்.

பிரபா குழுவினர் கூறுவது போல தம்மீது தாக்குதல் நடாத்தப்பட்ட படையினரின் இலக்குகள் மீதே தாக்குதல் நடாத்தியது உண்மை யானால் அதற்கான இலக்கு மூதூர் அல்ல. பிரபா குழுவின் இலக்குகள் மீது விமானப் படையினரே தாக்குதல் மேற்கொண்டனர். இதற்காகப் பலாலி, கட்டுநாயக்கா விமானப்படைத் தளங்களிலிருந்தே விமானங்கள் சென்று தாக்குதல் மேற்கொ...ன. இதனை விட மாவிலாறு அணைக்கட்டை திறப்பதற்கான இராணுவ நடவடிக்கையும் மட்டக்களப்பு கல்லாற்றுப் பகுதியிலிருந்தும், வெலிக் கந்தைப் பகுதியிலிருந்தும் மேற்கொள் ளப்பட்டன. எனவே பிரபா குழுவினர் இலக்கு வைப்பதாக இருந்தால் முதலில் இவ்விடங்களிலேயே இலக்கு வைத்திருக்க வேண்டும். இதனை விடுத்து முஸ்லிம் மக்கள் பெரும் பான்மையாக வாழும் மூதூரை இலக்காக்கியது ஏன்?

...மீதான பிரபா குழுவின் ...குதல் தற்காலிகமாக நட...தேறிய...ன்றல்ல. நீண்ட கால ...ழ்ச்சி நிரலின் அடி...படை...ல் கனகச்சிதமாக திட்டமேற்ற...டன்தான் நடாத்தப் ப...ள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன் கூட பின்... பெ...றில் மு...லிம் மக்... ...டு



வெளியேறுமாறும் இல்லை ...டுக் கொல்லப்படுவீர்கள் என்ற எ...சரிக் கையுடன் பிரபா கு...வினர் ...டுப் பிரசுரங்களை மூ...ரில் வி...யோ கித்தனர். தேசிய, சர்வதேச ரீதியில் இதற்கெதிராக கடும் கண்டனங்கள் எழுந்ததினால் பிரபா குழுவினர் இதனை தாம் செய்யவில்லையென பல்டி அடித்தனர்.

கிழக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றி இன சுத்திகரிப்பு நடவடிக்கை எடுப்பது பிரபா குழுவின் நீண்டகாலத் திட்டங்களில் ஒன்று. இதற்கு இப்போது மூதூரில் செயலுருவம் கொடுத்துள்ளனர். 1990ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு சில மணிநேர...தில் உடுத்த உ...

அகதிகளாக வெளியேற்றி தமது இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை ஆரம்பித்த பிரபா குழுவினர் அதே காலப் பகுதியில் கிழக்கிலும் முஸ்லிம் கிராமங்கள் மீதும், மத வழிபாட்டுத் தளங்கள் மீதும் கொடூரமான தாக்குதல் மேற்கொண்டனர். இப்போது மீண்டும் தமது இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை தூசு தட்டியுள்ளனர்.

கிழக்கு மண்ணிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றவேண்டும் என்ற பிரபா குழுவின் திட்டத்திற்கு முதலில் மூதூரைத் தேர்ந்தெடுத்ததிலும் வலுவான காரணங்கள் உண்டு. தமது இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை மூதூரி லிருந்து ஆரம்பிக்கப் போவதை பிரபா குழுவினர் பலடவைகள் மறைமு கமாகவே கூறியிருந்தனர். இறுதியாக ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த் தையின்போது இதற்கான முதல் பிள்ளையார் சுழியைப் போட்டனர் பிரபா குழவினர். அப் பேச்சுவார்த்தையின்போது அன்டன் பாலசிங்கத்தினால் முஸ்லிம் மக்களில் ஜிகாத் எனும் ஆயுதக் குழு உள்ளதாக புதுக் கதை ஒன்று விடப் பட்டது. அவ்வாயுதக் குழுவினருக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறிய பிரபா குழுவினர் ஜிகாத் குழுவினர்கள் என்று சிலரின் பெயர்களையும் வெளியிட்டனர்.

பிரபா குழுவினரால் ஜிகாத் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் பெருமளவான முதூர் பிரதேச இளைஞர்களே இடம்பிடித் திருந்தனர். அப்போதே தமது தாக்குதலுக்கான திட்டத்தை வகுத்து விட்டுத்தான் ஜிகாத் எனும் புதுக் கதையை அவிழ்த்தனர் பிரபா குழுவினர். இது மட்டுமன்றி திருமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்கும், அங்கு தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கவும் மூதூர்ப் பகுதி தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட வேண்டும் என்பது பிரபா குழுவின் ஆழமான திட்டம். இதற்கு அங்குள்ள முஸ்லிம் மக்கள் பெரும் தடையாக இருந்து வந்துள்ளனர். எனவே ஒரு திடீர்த் தாக்குதல் நடாத்தி முஸ்லிம் மக்களை வெளியேற்றுவதன் மூலம் பல அனுகூலங்களைப் பெற பிரபா குழுவினர் திட்டமிட்டிருந்தனர்.

இத் தாக்குதலின்போது பிரபா குழுவினரால் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும்,

(09ம் பக்கம் பார்க்க)

# பிரபா குழுவின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமே மூதூரில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களும், வெளியேற்றமும்.

## பிரபா குழுவின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான தெளிவானதும், உறுதியானதுமான நடவடிக்கை அவசியம் என்கின்றார் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தூயவன்.

கடந்த சில தினங்களுக்கு முன் திருமலை மாவட்டம் மூதூர் பகுதியில் அரச படையினர் மீதான பிரபா குழுவின் வலிந்த தாக்குதலின்போது ஆகக் குறைந்தது 32 முஸ்லிம் சகோதரர்கள் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாக மூதூரைவிட்டு வெளியேறியுள்ளனர். பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் பிரபா குழுவினால் இருட்டறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நிலைமை என்னவென்று இதுவரை தெரியவில்லை. முஸ்லிம் சகோதரர்கள் மீதான கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதலை தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டிப்பதுடன் முஸ்லிம் சகோதரர்களுக்கெதிரான பிரபா குழுவின் கொடமைகளுக்கும், கொடூரங்களுக்கும் இதுவே இறுதிச் சந்தர்ப்பமாக அமையவேண்டும் என்பதுடன் படுகொலை செய்யப்பட்ட மக்களின் குடும்பத்தினரின் துயரங்களில் நாமும் பங்கெடுக்கின்றோம் என தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தூயவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூரைவிட்டு முஸ்லிம் மக்களின் வெளியேற்றமானது தற்காலிகமாக நடந்தேறியதொன்றல்ல. பிரபா குழுவின் நீண்டகால நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நன்கு திட்டமிட்டே முஸ்லிம் மக்கள் மூதூரைவிட்டு நிரந்தரமாக வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணப்பாட்டிலேயே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. கடந்த சில வாரங்களுக்கு முன்பும் முஸ்லிம் மக்களை மூதூரை விட்டு வெளியேறுமாறும் இல்லை கொல்லப்படுவீர்கள் என்ற எச்சரிக்கையுடன் பிரபா குழுவினர்களால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

1990ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தொடங்கி வடகிழக்கில் முஸ்லிம், சிங்கள இனச் சகோதரர்களுக்கெதிராக பல இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையில் பிரபா குழுவினர் ஈடுபட்டனர். 1990ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு சில மணிநேரத்தில் முஸ்லிம் மக்களை அகதிகளாக வெளியேற்றியதுபோன்று கிழக்கில் முஸ்லிம் மக்களை வெளியேற்றும் பிரபா குழுவினரின் திட்டத்திற்கு இப்போது மூதூரில் செயலுருவம் கொடுத்துள்ளனர். இது மிகப் பாரதூரமான ஒரு விடயமாகும். அடிப்படை மனித உரிமை மீறலுங்கூட.

மூதூரில் முஸ்லிம் மக்களையும், பிரபா குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் மக்களையும் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி தாக்குதல் நடாத்திவிட்டு தாம் மரபுவழிச் சமரில் யுத்தம் புரிந்ததாக மார்தட்டுகின்றனர். பொதுமக்களை மனிதக் கேடயங்களாகக் கொண்டு, மக்களைப் பலிகொடுத்து நடாத்தப்பட்ட இத் தாக்குதல் பயங்கரவாத, கோழைத்தனமான தாக்குதலாகும். எமது வெளியேற்றத்தை தொடர்ந்து இனி எப்போதும் பிரபா குழுவால் மரபுவழிச் சமரில் ஈடுபட முடியாது என்பது நிரூபணமான ஒன்று. மரபுவழிச் சமரானது பிரபா குழுவைப் பொறுத்தவரை இனி சொல்லளவிலேயே அன்றி செயற்பாட்டில் சாத்தியமற்றது. இதனைப் பிரபா குழுவின் தலைமையும் உணர்ந்துள்ளது.

இயற்கை மனிதனுக்கு வழங்கிய அருட் கொடைகளில் ஒன்றான நீரைக்கூட போராட்ட ஆயுதமாகப் பயன்படுத்தும் நாகரீகமற்ற கோழைகள் பொது மக்களை பணயமாக வைத்து தாக்குதல் நடாத்துவதில் ஒன்றும் வியப்பில்லை. மாவிலாற்றுப் பிரச்சினையைத் திசைதிருப்பவும், மூதூரைவிட்டு முஸ்லிம் மக்களை வெளியேற்றவுமே இத்தாக்குதல் பிரபா குழுவினால் நடாத்தப்பட்டது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் பயங்கரவாதத் தாக்குதல்கள் மூலம் அவர்கள் இலக்கை அடைந்துவிடுவார்களானால் அது இந்நாட்டில் ஒரு மாபெரும் தவறான உதாரணமாகவும், பயங்கரவாதத்திற்கான வெற்றியாகவும் அமைந்துவிடும். இது விடயத்தில் இலங்கை அரசாங்கம் தெளிவானதும், உறுதியானதுமான செயற்திறன்மிக்க தீர்மானங்களை மேற்கொண்டு பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும்.

இதனைவிட பிரபா குழுவின் தாக்குதல் காரணமாக அகதிகளாக இடம்பெயர்ந்த பல்லாயிரம் மக்களின் மனிதாபிமான உரிமைகளையும், அடிப்படை வசதிகளையும் அரசாங்கம், தொண்டர் நிறுவனங்களும் பூர்த்திசெய்து கொடுப்பதுடன் அம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்வதுடன், அம்மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும். இதற்கு சர்வதேசத்தின் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கவேண்டும் என்பதே எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடாகும்.

இதனைவிட முக்கியமாக பிரபா குழுவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெருமளவான முஸ்லிம் இளைஞர்களின் விடயத்தில் அரசாங்கமும், சர்வதேச சமூகமும் உடனடியாகத் தலையீடு செய்து அவ்விளைஞர்களின் உயிர்களைக் காப்பாற்றவேண்டும். அத்துடன் முஸ்லிம் மக்களின் இழப்பீடுகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

# ஏறாவூரில் ஓடிய இரத்தம் தமிழீழத்தை ஒரு அங்குலமேனும் முன் நகர்த்தியதா?

அமிர்அலி

காத்தான்குடி பள்ளிவாசல்களில் நடத்தப்பட்ட படுகொலையில் இரத்தப்பசி அடங்காத பிரபாகரன் அந்த கொடிய துயரம் நிழந்த 8 வது நாளே இன்னும் ஒரு இனப்படுகொலைக்கு ஆணையிட்டார். ஆகஸ்ட் 11 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் இன்னுமொரு கொலைக்களத்தை புலிகள் தேர்ந்தெடுத்தனர். ஏறாவூரை அண்டிய ஐயங்கேணி, சதாம்ஹுசைன் போன்ற கிராமங்களில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் அவ்வேளை இரவுத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். நடுநிசியில் துப்பாக்கி மற்றும் வாள் போன்ற கூரிய ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் புகுந்த 100 ம் மேலான புலிக் கொலைஞர்கள் தமது வெறியாட்டத்தை நிகழ்த்தினர். உறக்கத்தில் இருந்த வேளையிலேயே பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் என்ற எவ்வித வேறுபாடும் இன்றி அனைவருமே கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்ட இந்த வெறியாட்டம் வீடு வீடாகத் தொடந்தது. சுமார் 3 மணி நேரத்துக்கு மேலாக மக்களின் உயிர்கள் உடமைகள் அனைத்தையும் அழித்தொழித்த பின்பே ஓய்ந்தது. கொல்லப்பட்ட உடல்கள் அனைத்தும் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு குடல்களும் மூளைகளும் வெளியே சிதறுண்டு கிடந்தன. பால்மணம் மாறாக பச்சிளம் பாலகர்கள் கூட இரத்தவெள்ளத்தில் மிதந்தனர். இவையனைத்தையும் செய்த புலிகளால் என்ன நன்மையடைய முடிந்தது என்பதே இன்றைய கேள்வி. தமிழீழத்தை ஒரு அங்குலம் ஏனும் இப்படுகொலைகளால் முன் நகர்த்த முடிந்ததா? விதைவைகளையும், அநாதைகளையும் மட்டுமே ஏறாவூரை அண்டிய கிராமங்கள் இன்று தாங்கி நிற்கின்றது. 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாக மட்டும் 26 குழந்தைகள் அன்று அழித்தொழிக்கப்பட்டனர். கணவனை இழந்த விதவைகளின் தொகை 82 ஆகும். 10 மேற்பட்ட குடும்பங்கள் கிட்டத்தட்ட முழுமையாகவே அழித்தொழிக்கப்பட்டன. சுமார் 40 இற்கும் மேற்பட்டோர் கை கால்களை இழந்து படுகாயம் அடைந்த நிலையில் வலது குறைந்தோர் ஆக்கப்பட்டனர்.

இனியொருபோதும் இப்படியானதொரு இனச்சுத்திகரிப்பு கிழக்கில் நிறைவேற கிழக்கு மாகாணத்தின் எந்வொரு பிரசைகளும் அனுமதிக்கக் கூடாது. அதுமட்டுமே அன்று உயிர்நீத்த அந்த 116 சுஹதாக்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாக இருக்கமுடியும்.

# 103 ஜனாஸாக்களும் ஒரே கபுறுவில் நல்லடக்கம் செய்யப்பட்டன

அன்றும் வழமைபோல் சூரியன் படுவான்கரைக்குள் படுத்துறங்கியிருந்தான். எங்கும் எப்போதும் பரபரப்பான அந்த காத்தான்குடி பட்டினம்கூட இஷா தொழுகைக்கான வாங்கோசை கேட்டபோது சற்று அமைதியாய்தான் போனது. அன்று ஆவணி திங்கள் மூன்றாம் நான் என நாள்காட்டி சொல்லி நின்றது காத்தான்குடி 1ம் குறிச்சியில் அமைந்துள்ள மீரா ஜும்மா பள்ளிவாசலிலும், ஊர்றோட் என அழைக்கப்படும் ஆற்றோர வீதியில் அமைந்துள்ள ஹுஸைனியா தைக்காவிலும் நூற்றுகணக்கானோர் இரவு தொழுகைக்காக கூடியிருந்தனர். அப்போதுதான் காத்தான்குடி வீதிகளை கன்னமிட்டிருந்த அந்த புலிகொலைஞர்கள் இந்த புனித பள்ளிகளுக்குள் ஆயுதங்களுடன் புகுந்தனர். அதன்பின்னர் நடந்தவை விபரிக்க முடியாதவை. முஸ்லிம்கள் என்கின்ற ஒரே காரணத்தினால் கிழக்கினது 103 மனித உயிர்கள் பிரபாகரனால் குடிக்கப்பட்டது. வயோதிபர்கள், சிறுவர்கள் என்ற வேறுபாடுகள் ஏதுமின்றி இரத்த வெள்ளத்தில் அவர்கள் மிதந்தனர். "அல்லாஹு அக்பர்" என்று ஒருமித்து சொன்ன மாத்திரத்தில் மூடிய அவர்களது விழிகள் ஏதுமே பின்னர் திறக்கவில்லை. குனிந்து நிலத்தில் தொழுத வண்ணமே அவர்கள் சுஹதாக்களாக்கப்பட்டனர்.

எப்படியானதொரு உக்கிரமான போர் சூழலிலும் தாக்குதல் இலக்குகளிலிருந்து மதஸ்தலங்களுக்கு விலக்களிக்கப்படுவது உலக நியதி. இதனால்தான் மக்களது இருப்பிடங்கள் கூட யுத்தவாதிகளின் தாக்குதல்களுக்கு உட்படுகின்ற வேளைகளில் பொதுமக்கள் ஆலையங்களில் தஞ்சமடைவது வழமையாயுள்ளது. ஆனால் இந்த இரத்த வெறிபித்த புலிகள் புனித பள்ளிவாசல்களை தேடிசென்று தாக்கினர். புலிகளிடம் நாம் எந்தவொரு யுத்த தர்மங்களையும் எதிர்பார்க்க முடியாது என்பதை அவர்கள் 16 வருடங்களுக்கு முன்பே காத்தான்குடியில் நிரூபித்திருக்கிறார்கள். ஒருபுறம் 65 வயது, 70 வயது, 72 வயது என்று தள்ளாத வயதிலும் எல்லாம் வல்ல பெருமானை வழிபடவந்த வயோதிபர்கள் முறையே ஏ.பக்கிர் முகைடின், ஏ.எம்.முகமட் முஸ்தபா, எஸ்.எம்.எம்.முஸ்தபா போன்றோரும் இரத்தவெள்ளத்தில் கிடந்த காட்சி நெஞ்சத்தை பிழிவது. மறுபுறம் எம்.எஸ்.எம்.அக்றம் (6வயது), எம்.எஸ்.எம்.தஹ்லாம் (8வயது), எஸ்.எம்.இம்தியாஸ் (9 வயது) போன்ற பிஞ்சுகளின் உடல்கள் துப்பாக்கிகளால் துணைக்கப்பட்ட கொடுமைகள் சொல்லும் தரமற்றவை. இரண்டு பள்ளி வாசல்களிலும் கொல்லப்பட்ட 103 பேரினது உடல்களும் மீரா ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னால் ஒரே நீள கபுறுவில் (மடு) பள்ளி நிர்வாகத்தின் முடிவுக்கேற்ப புதைக்கப்பட்டது.

பொட்டமான் [illegible] திட்டமிடப்பட்ட இத்தாக்குதலில் கரிகாலன் நேரடியாகவே பங்கெடுத்திருந்தார். மற்றும் தளபதிகளான நிகன் (இப்போது உயிருடன் இல்லை.) ரமேஸ் (வன்னியில் தளபதியாக உள்ளார்.), ரஞ்சித் (காவற்துறை பொறுப்பாளராக உள்ளார்.) போன்ற கொலைகாரர்களின் தலைமையிலேயே இப்படுகொலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவர்கள் ஒருபோதும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க கூடாது என்பது ஒருபுறமிருக்க, இத்தாக்குதல் நடவடிக்கைகள் ஊடாக யாழ்ப்பாண மேலாதிக்கம் சாதிக்க நினைத்தது என்ன என்பதனை முஸ்லிம், தமிழ் மக்கள் கவனம் கொள்ள வேண்டும். அதனூடாக மட்டுமே கிழக்கில் இதுபோன்ற அனர்த்தங்கள் மீண்டும் மீண்டும் நடக்காது நாம் தடுக்க முடியும். அந்த வகையில் 2004 மார்ச் மாதத்தில் புலிகளது கிழக்கு பிளவினால் ஏற்பட்ட விழிப்பு வரவேற்கத்தக்கது. கடந்த காலங்களில் நடந்த இந்த அனர்த்தங்களுக்கு அவர்களும் ஏதோ ஒருவகையில் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்பதே பெரும்பாலான முஸ்லிம்களின் கருத்தாகவுள்ளது. ஆனால் இன்று கருணா அம்மான் தலைமையில் இயங்குகின்ற அவர்களது எதிர்கால நடவடிக்கைகள் "தமிழ் வெறி" யிலிருந்து விலகி "கிழக்கு" எனும் ஒற்றுமையுணர்வை வேண்டி நிற்பதுவும், முஸ்லிம்களை பொறுத்தவரை நீண்டதொரு இருள்வெளியில் ஒரு புள்ளி வெளிச்சம் உருவாகியிருக்கிறது எனும் நம்பிக்கையும் வளர்க்க தொடங்கியுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

# தோற்றுப்போன தனி ஈழக் கொள்கை

தொடர் ‑04

**வள்ளுவன்**



**புலிகள் தொடர்பான இந்திய அதிகாரிகளின் நிலைப்பாடு.**

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜீ பிரதமர் ராஜீவ் காந்தியைப் பார்த்து அமைதியாகக் கூறினார் புலிகள் இயக்கம்தான் முதன் முதலாக இந்துப் பத்திரிகையாசிரியர் திரு ராம் ஊடாக சமாதான நடவடிக்கை தொடர்பான தமது அக்கறையை வெளிப்படுத்தியவர்கள். எனவே அவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மீறி செயற்படுவார்கள் என நான் நினைக்கவில்லை, ஆனாலும் இதனையும் மீறி புலிகள் செயற்பட்டால் அவர்கள் இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள வேண்டியதுதான். இந்திய இராணுவத்தின் பலம்பற்றி அவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள் என நம்புகின்றேன்.

ஆனால் பிரதமர் ராஜீவ் காந்தி ஒழுங்கு செய்திருந்த அவ்வுயர்மட்ட அதிகாரிகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தியாவின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் எம்.கே. நாராயணன் (இவர் தற்போது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகவுள்ளார்) இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கே.என். திக்ஷித் ஆகியோர் பிரபாகரன் வன்முறைகளிலேயே ஆர்வமுடையவர் எனவே அவர்களை நம்பமுடியாது ஆதலால் இப்போதே பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தால் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்த தீர்க்கமான திட்டமொன்றை வகுப்பது சிறந்தது என்றனர்.

புலிகள் தொடர்பாக அப்போதைய இந்திய உயரதிகாரிகள் மட்டத்தில் மாறுபாடான எண்ணப்பாடு இருந்தது. இந்திய வெளியுறவு, புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள் புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை சிலவேளை நிராகரிக்கலாம் எனவும் அவ்வாறான பட்சத்தில் புலிகளை அடக்கி பிரபாகரனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அதிரடி இராணுவ நடவடிக்கை அவசியம் எனவும் அவ்விராணுவ நடவடிக்கைக்கான திட்டம் இலங்கைக்கு இந்திய அமைதிகாக்கும் அனுப்பப்படும்போதே வகுக்கப்படவேண்டும் எனவும், இவ்வதிரடி இராணுவ நடவடிக்கைக் கான அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதற்கு அமைதிகாக்கும் படையைப் பயன்படுத்துவதை விடுத்து விஷேட கொமாண்டோப் படையினரைப் பயன்படுத்த வேண்டும் எனவும் ஆலோசனை கூறினர்.

ஆனால் இந்தியப் பாதுகாப்புத் துறை அதிகாரி இந்திய இராணுவப் பலத்தைப் பற்றி புலிகளுக்கு நன்கு தெரியும் என்பதால் எக்காரணங் கொண்டும் இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள புலிகள் முனையமாட்டார்கள் என அதீத நம்பிக்கை கொண்டதுடன் சிலவேளை புலிகள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தால் இலங்கையில் நிலைகொண்டிருக்கும் அமைதிப் படை மூலம் பிரபாகரனைக் கைதுசெய்யும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளலாம் எனும் நிலைப்பாட்டில் இருந்தனர்.

இந்தியாவில் வைத்து பிரபாகரனும் ஆயுதங்களைக் கையளிக்க இணக்கம் தெரிவித்திருந்தமையினால் நிலைமை கைமீறிப் போனது எனவும், பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியும் எனவும் இந்திய அரசாங்கம் நம்பியது.

**இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பான பிரபாகரனின் நிலைப்பாடு.**

**இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அப்போதே பிரபாகரன் நயவஞ்சகமான நிலைப்பாட்டில் இருந்ததை இந்தியப் படை உயரதிகாரியினால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.**

இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அப்போதே பிரபாகரன் நயவஞ்சகமான நிலைப்பாட்டில் இருந்ததை இந்தியப் படை உயரதிகாரியினால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அச்சமயம் பிரபாபரன் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை பயன்படுத்தி இந்திய அரசிடமிருந்து முடியுமானவரை உதவிகளைப் பெறுவதிலேயே அதிக ஆர்வம் காட்டினார். இலங்கை இந்திய ஒப்பந்தத்திலுள்ள, மக்களுக்குத் தீர்வுகள் கிடைக்கக்கூடிய பல அரிய வாய்ப்புக்கள் பற்றியும், அதனைப் பயன்படுத்துவது குறித்தும் சிறிதும் அக்கறை காட்டவில்லை.

வடகிழக்கு இடைக்கால நிர்வாகத்தில் புலிகள் இயக்கத்திற்கு அதிகபட்ச முன்னுரிமை அளிக்கப்படும் என இந்தியா பிரபாகரனிடம் உறுதியளித்தது. ஆனால் அப்போதே பிரபாகரன் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி எனும் நிலைப்பாட்டில் இருந்ததினால் வட கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தில் ஏனைய தமிழ் இயக்கங்களையும், மிதவாத தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக் கொள்ள விருப்பம் தெரிவிக்கவில்லை. வடகிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தின் முழு அதிகாரமும் தம்மிடமே வழங்கப்படவேண்டும் எனக் கூறினார்.

ஆனால் இதற்கு இந்திய அதிகாரிகள் உடன்படவில்லை. அவ்வாறு வடகிழக்கின் முழு அதிகாரத்தையும் புலிகளிடம் ஒப்படைத்தால் அது ஜனநாயக முறையல்ல எனவும் சர்வாதிகார வழிமுறை எனவும் எடுத்துக் கூறியதுடன் கிழக்கு மாகாணத்தில் EPRLF அமைப்பிற்கு கணிசமான ஆதரவுள்ளதையும் அவர்கள் எடுத்துக் காட்டினர். எனவே மாற்று இயக்கத்தினரும் வடகிழக்கு நிர்வாக சபையில் இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் ஆனால் தலைமைப் பிரதிநிதி உட்பட கணிசமான பங்கு புலிகளுக்கே வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

**புலிகளுக்கு இந்தியா பணம் வழங்கியதா?**

அத்துடன் புலி இயக்க உறுப்பினர்களை நிர்வாக அமைப்பிற்குள் இணைத்துக் கொள்ளப்படும்வரை நிதியுதவி வழங்கப்படும் எனவும் இந்திய அதிகாரிகள் உறுதியளித்தனர். இதனைப் பயன்படுத்தி இந்தியாவிடமிருந்து பெருமளவான நிதியுதவிகளைப் பெற பிரபாகரன் திட்டமிட்டார். தமது இயக்கத்தை மக்களின் வரிப்பணத்திலேயே கொண்டு நடாத்துவதாகக் கூறிய பிரபாகரன் இதற்காக யாழ்ப்பாணத்திலிருந்தும், மட்டக்களப்பு திருமலை போன்ற இடங்களிலிருந்தும் வரி வசூலிக்கப்படுவதாகவும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமது உறுப்பினர்களை நிர்வாகக் கட்டமைப்பிலும், பொலிஸ் சேவையிலும் இணைத்துக்கொள்ள 06 முதல் 08 மாதங்கள் வரை தேவைப்படுமென கூறிய பிரபாகரன் இதற்கென இந்தியா ஐம்பது கோடி ரூபாய் பணம் தரப்படவேண்டுமெனவும் கூறினார்.

பிரபாகரன் இந்தியாவிடம் கோரிய இப் பெருந்தொகைக் பணம் வழங்கப் பட்டதா? இல்லை என்பது குறித்து இதுவரை ஆதாரபூர்வமான தகவல்கள் ஏதும் இல்லாதபோதும் 1988ம் ஆண்டு மார்ச் மாதத்தில் லண்டனிலிருந்து வெளிவந்த ஆங்கில இதழ் ஒன்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்த ராஜீவ்காந்தி புலிகளுக்கு பெருந்தொகைப் பணம் வழங்கினார் எனும் பரபரப்புச் செய்தியொன்றை வெளியிட்டது.

இப்பணம் இந்திய வெளியுறவுத் துறை, பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்குக் கூடத் தெரியாமல் இந்தியப் புலனாய்வுத் துறையினூடாக கைமாறப்பட்டதாகவும் அச்செய்தி கூறியது. இச் செய்தி இந்திய அதிகாரிகள் மட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இச் செய்தி தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை உயர் அதிகாரிகளுக்கும், றோ உயர் அதிகாரிகளுக்குமிடையே பெரும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இது தொடர்பான சர்ச்சை அப்போது இந்தியப் பாராளுமன்றத்திலும் எதிரொலித்தது. எதிர்க் கட்சிகள் புலிகளுக்குப் பணம் வழங்கினார் என பிரதமர் ராஜீவ்காந்தி மீது குற்றம் சுமத்தியதுடன் இது தொடர்பாக கடும் கண்டனமும் தெரிவித்தனர். ஆனால் இச் செய்தி தொடர்பாக இந்திய அரசாங்கம் உறுதியான பதில் எதனையும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் இந்திய அமைதிகாக்கும் படை இலங் கைக்குச் செல்லத் தயாரானது. ஆனால் இதுதொடர்பில் அப் போதைய இந்திய வெளிவிவகார அமைச்சரான பீ.வி. நரசிமராவ் மாறுபட்ட கருத்தொன்றைக் கொண்டிருந்தார். புலிகளின் ஆயதக் களைவுக்கு இந்திய அமைதிகாக்கும் படையினரையே பயன்படுத்த வேண்டும் எனவும் இந்திய இராணுவத்தை மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

இவ்வாறான பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கும் சர்ச்சைகளுக்குமிடையில் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுலப்படுத்தவும் வடகிழக்கில் அமைதியை நிலைநாட்டவும் அனுப் பப்பட்டது. இந்தியப் படையின் முதல்த் தொகுதியினர் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

**மக்களின் வரவேற்பும் புலிகளின் திண்டாட்டமும்.**

இந்திய இலங்கை ஒப்பந்தம் குறித்து மக்களுக்குப் பூரண விளக்கம் கிட்டாத நிலையிலும் இந்தியப் படையினர் இலங்கை வருகின்றனர் எனும் செய்தி தமிழ் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியளித்தது. இந்தியப் படையினரை வரவேற்க வடகிழக்குத் தமிழ் மக்கள் பெரும் ஆவமாக இருந்தனர். இது புலிகளுக்கு பெரும் திண்டாட்டத்தையும், தர்மசங்கடமான நிலைமையையும் உருவாக்கியது.

இந்தியப் படையினருடன் தமிழ் மக்கள் ஐக்கியமானால் அது தமக்குப் பெரும் ஆபத்தாக முடியுமென புலிகளின் தலைமை கருதியது இதனால் தமிழ் மக்கள் இந்தியப் படையினரின் வருகையை விரும்பவில்லை எனும் தோற்றப்பாடொன்றை உருவாக்கத் திட்டமிட்டனர். இதற்காக பலாலியில் வந்திறங்கிய இந்தியப் படையினரை யாழ்ப்பாணம் நோக்கி நகரவிடாமல் தடுக்கும் முயற்சியொன்றை மேற் கொண்டனர் புலிகள். இத்தடுக்கும் நடவடிக்கை மக்கள் மூலமாகவே நடைபெறுகின்றது எனக் காட்டவும் திட்மிட்டனர். இதற்காக பயணிகள் பஸ்களை மறித்து பயணிகளை பலாத்காரமாக இறக்கி அழைத்துவந்து மறியல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனைவிட தமது இயக்க உறுப்பினர்களின் குடும்பத்தினரையும் அழைத்துவந்து பலாலிக்குத் தெற்காகக் கட்டுவனிலும் மேற்காகவும் இறக்கினர். இதனால் இந்தியப் படையினர் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

சுழற்சி முறையில் வீதி மறியலுக்கு ஆட்களை விலைகொடுத்தும் பலாத்காரமாகவும் புலிகள் ஈடுபடுத்தினர். இதனால் மூன்று தினங்களாக இந்தியப் படையினர் பலாலி இராணுவத் தளத்தில் தங்கவேண்டி ஏற்பட்டது. மறியலில் ஈடுபட்டவர்கள் மூலம் புலிகள் இந்தியப் படையினருக்குக் கோரிக்கை ஒன்றையும் விடுத்தனர். இந்தியப் படையினர் யாழ்ப்பாணம் செல்லத் தேவையில்லையெனவும் எல்லைக் கிராமங்களுக்குச் சென்று தமிழ் மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதே கோரிக்கையாகும்.

ஆனால் தமிழ் மக்கள் இந்தியப் படையினரின் வருகையை பெரிதும் ஆதரித்ததனால் புலிகளினால் தொடர்ந்தும் மறியலில் ஈடுபட முடியவில்லை. அதற்கு மக்களின் ஆதரவு கொஞ்சமும் கிடைக்கவில்லை. இந்நிலையில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராகவிருந்த திலீபன் ஒரு தந்திரோபாயத்தைக் கையாண்டார். அதாவது அறிக்கையொன்றை வெளியிட்டார். அதில் உலகில் நான்காவது பெரிய இராணுவ வல்லமையுடைய இந்திய இராணுவத்தை எமது மக்கள் யாழ்ப்பாணம் செல்லவிடாமல் தடுத்து வருகின்றனர். இந்தியா உலகிலுள்ள முன்னணி நாடுகளில் ஒன்று அவ்வாறான இந்தியப் படையினரால் கூட எமது மக்களின் எதிர்ப்பினால் ஒரு அடிகூட நகர முடியவில்லை இந்தியப் படையினர் எமது எதிரிகளல்ல எனவே அவர்களை யாழ்ப்பாணம் செல்ல அவர்கள் அனுமதிக்கவேண்டும். என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

தொடரும்...

# தமிழ் மக்களுக்கு தடுக்கப்பட்ட தீர்வுகள் திம்பு தொடக்கம் இன்றுவரை.

### வரலாற்றுத் தொடர்...~04

புலவன்




திம்பு 2ம் கட்டப் பேச்சுவார்த்தையில் தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளை இலங்கை அரசு முற்றாக நிராகரித்ததுடன் பேச்சுவார்த்தையில் எட்டப்படும் தீர்வுகளை அமுல்ப்படுத்த வேண்டுமானால் சில நிபந்தனைகளுக்கு தமிழ்ப் போராட்ட இயக்கங்கள் கட்டுப்பட வேண்டும் எனவும் முன் நிபந்தனையும் விதித்தது.

**போராட்ட இயக்கங்களுக்கான முன் நிபந்தனை.**

இப் பேச்சுவார்த்தையிலோ அல்லது எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகளிலோ ஏதேனும் முடிவுகள் எட்டப்பட்டு அவை அமுல்ப்படுத்தப்பட வேண்டுமானால் தமிழ்ப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும் தமது ஆயுதங்களையும், தொலைத்தொடர்பு சாதனங்களையும் இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.

போராட்ட இயக்கங்களின் இலங்கையிலுள்ள, வெளிநாட்டிலுள்ள எல்லாப் பயிற்சி முகாம்களும் மூடப்படவேண்டும். யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்துள்ள அகதிகள் அவர்கள் முன் வாழ்ந்த இடங்களில் பாதுகாப்பாக வாழ அனுமதிக்கப்பட வேண்டும். இந் நிபந்தனை வடகிழக்கில் போராட்ட இயக்கங்களினால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை மையப்படுத்தியதாக இருந்தது.

அத்துடன் தாக்குதலினால் சேதமாக்கப்பட்ட அனைத்து வணக்க ஸ்தலங்களும் புனரமைக்கப்பட்டு அவரவர் தமது மதங்களை கடைப்பிடிக்க, அவர்களின் மத சுதந்திரம் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டவாறு பின்பற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

மேற் கூறப்பட்ட முன் நிபந்தனைகள் போராட்ட இயக்கங்களால் திருப்திகரமாக கடைப்பிடிக்கப் படுகின்றது என அரசாங்கம் கருதும் பட்சத்தில் மாத்திரமே பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவர். இலங்கையில் சமாதானம் தோன்றுவதற்கான அடிப்படை இணக்கப்பாடும் இதுவே என இலங்கை அரச பிரதிநிதிகளினால் திம்புவில் இரண்டாங் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது கூறப்பட்ட முன் நிபந்தனைகள்.

இலங்கை அரசின் முன் நிபந்தனைகள் தமிழர் தரப்பை ஆத்திரமடையச் செய்தன. பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு எட்டப்படக் கூடாது எனும் நிலைப்பாட்டில் இருந்த போராட்ட இயக்கங்களுக்கு இலங்கை அரசின் நிபந்தனைகள் வாய்ப்பாக அமைந்தன. இலங்கை அரசின் நிபந்தனைகளுக்குப் பதிலாக தமது கோரிக்கைகளை முன்வைப்பதை விடுத்து இதனைக் காரணங் காட்டி பேச்சுவார்த்தை மேசையிலிருந்து வெளியேறவே அவை முனைப்புக் காட்டின.

இதனிடையே 10.08.1985 அன்று காலை வேளையில் வவுனியாவில் போராளி களினால் கிளைமோர் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இதில் உதவிப் பொலிஸ் இங்ஸ்பெக்டர் ஒருவரும் நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் உயிரி ழந்தனர். இத் தாக்குதலைத் தொடர்ந்து வவுனியாப் பொலிசாரும், இராணு வத்தினரும் பொது மக்களைத் தாக்கினர். பல கடைகள் தீமூட்டி எரிக்கப்பட்டன. இத்தாக்குதல் காரணமாக 10பேர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாய மடைந்தனர்.

திம்புவில் இரண்டாங் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இச்சம்பவம் இடம் பெற்றமையினால் பேச்சுவார்த்தையை நிராகரிக்க இதுவும் ஒரு சிறந்த வாய்ப்பாக பயன்படுத்தினர். படையினரின் இத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 400ற்கும் மேல் எனப் போராட்ட இயக்கங்களால் உணர்ச்சியூட்டும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரச தரப்பு தமிழர் தரப்பின் கோரிக்கைகளை முற்றாக நிராகரித்தமை, போராட்ட இயக்கங்களின் யுத்தநிறுத்த மீறல் என்பன காரணமாக இரு தரப்பினருக்குமிடையே மனக்கசப்பு பெருமளவு அதிகரித்திருந்தது. இதனால் 18.08.1985 அன்று 2ங் கட்டத் திம்புப் பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி முறிவடைந்தது.

இரண்டாங் கட்டத் திம்புப் பேச்சுவார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து நான்கு போராட்ட இயக்கங்களின் முன்னணியான ஈழத் தேசிய விடுதலை முன்னணி இலங்கை அரசுக்கு எதிரான யுத்தநிறுத்தம் முடிவுக்கு வருவதாக பகிரங்கமாக அறிவித்தது. இவ்வறிவிப்பை மிதவாத தமிழ்க் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினால் கட்டுப்படுத்தவோ, நிராகரிக்கவோ முடியவில்லை இதே நிலைப்பாட்டிலேயே ஈரோஸ் இயக்கமும் இருந்தது.

**இடையறாத இந்தியாவின் முயற்சி**

ஆனாலும் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்ப் போராட்ட இயக்கங் களுக்குமிடையே இணக்கப்பாடொன்றை ஏற்படுத்த இந்தியா தொடர்ந்தும் முயன்றது. இதற்கான முயற்சிகளை இந்திய வெளியுறவுச் செயலாளர் ரமேஸ் பண்டாரி மேற்கொண்டார். இதற்காக அவர் போராட்ட இயக்கங்களைத் தொடர்ந்தும் தொடர்பு கொண்ட வண்ணமிருந்தார். தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கவும், பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கவும் இலங்கை அரசு பின்னிற்பதாக போராட்ட இயக்கங்கள் அவரிடம் கூறின.

போராட்ட இயக்கப் பிரதிநிதிகளுக்கும், ரமேஸ் பண்டாரிக்குமிடையில் நடை பெற்ற பேச்சுவார்த்தையின்போது ரெலோ சார்பாகக் கலந்துகொண்ட சட்டத்தரணி சத்தியேந்திராவுக்கும் ரமேஸ் பண்டாரிக்குமிடையே ஒரு வார்த்தைப் பிரயோகம் காரணமாக பெரும் சர்ச்சை மூண்டது. இந்தியா பெரியண்ணன் தோரணையில் தம்மை மிரட்டுவதாக போராட்ட இயக்கம் குற்றஞ் சுமத்தின. இதனைத் தொடர்ந்து போராட்ட இயக்கங்களின் பிரதிநிதிகள் தமது தலைமைப் பீடத்தை கலந்தாலோசிக்க வேண்டும் என கூறி பூட்டானிலிருந்து சென்னைக்கு திருமிபினர். இலங்கை அரச பிரதிநிதிகள் தொடர்ந்தும் பூட்டானில் தங்குமாறு கோரப்பட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியும் பூட்டானில் தங்கியது.

ரமேஸ் பண்டாரியும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விஷேட அழைப்பின் பெயரில் புதுடில்லி சென்றனர். சென்னையிலிருந்த போராட்ட இயக்கங்களின் தலைவர்களையும் புதுடில்லிக்கு வருமாறு ராஜீவ்காந்தி அழைத்தார். இதற்கென விஷேட விமானம் ஒன்று சென்னைக்கு அனுப்பப்பட்டது. இவ்விமானம் மூன்று நாட்களாக சென்னை விமான நிலையத்தில் தரித்து நின்றபோதும் எப் போராட்ட இயக்கத் தலைவரும் புதுடில்லி செல்ல முன்வ்ரவில்லை.

## இந்திய அரசின் இவ்வதிரடி நடவடிக்கையினால் போராட்ட இயக்கங்கள் பெரிதும் அச்சமுற்றன.

இச் சந்தர்ப்பத்தில் போராட்ட இயக்கங்கள் தமிழ் மக்களின் நலன்களைப் பொருட்படுத்தாமல் போராடி தனிஈழம் பெவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தனர். இதற்காக பல மனித உயிர்கள் இழக்கப்பட்டாலும் அவர்கள் கவலையடையப் போவதில்லை என்பதும் இதற்கான மக்கள் ஆதரவு தமக்குத் தேவையில்லை என்பதையும் 18.08.1995 அன்று சென்னையில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் வெளிப்படுத்தினார். பத்திரிகையாளர் சந்திப்பொன்றின்போது கருத்து வெளியிட்ட அன்டன் பாலசிங்கம்.

போர் நிறுத்தத்தை இலங்கை இராணுவம் மீறிவிட்டது. கடந்த இரு தினங்களில் பல தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவே இனியும் போர்நிறுத்தத்தைக் கடைப் பிடிப்பதில் அர்த்தமில்லை போரிடாமல் மரணிப்பதைவிட போரிட்டு மரணிப்பதே மேல் போராட்ட இயக்கங்களுக்கான ஒற்றுமை மூலம் தனி ஈழத்திற்கான யுத்தத்தை முன்னெடுக்க வேண்டும் இதில் இரத்தம் சிந்தப்படலாம், பல உயிர்கள் பறிக்கப்படலாம் ஆனாலும் இறுதியில் நாம் வெற்றிபெறுவோம் அதற்கான படைப்பலமும் இராணுவத் திறனும் எம்மிடம் உண்டு என்றார்.

**இந்திய அரசின் அதிரடி நடவடிக்கை.**

இந்திய மத்திய அரசை உதாசீனப்படுத்தும் விதமாக போராட்ட இயக்கங்கள் நடந்துகொண்டமையினால் போராட்ட இயக்கங்களுக்கு எச்சரிக்கை விடுக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்தது. இதனடிப்படையில் 24.08.1985 அன்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும், தந்தை செல்வாவின் மகனும் சட்டத்தரணியுமான சந்திரகாசனும் திடீரென இரவோடு இரவாக சென்னையிலிருந்து நாடு கடத்தப்பட்டனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையமூடாக மும்பை விமான நிலையம் கொண்டு செல்லப்பட்ட இவர்கள் புதுடில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அன்டன் பாலசிங்கம் பிரித்தானியா கடவுச் சீட்டு வைத்திருந்தமையினால் லண்டனுக்கும், சந்திரதாசன் பலதடவைகள் அமெரிக் காவுக்கு சென்று வந்ததினாலும் அமெரிக்காவுக்கு சென்று வரக் கூடிய முன்னனுமதி பெற்றிருந்தமையினாலும் அமெரிக்காவுக்கும் நாடுகடத்தப்பட்டனர்.

இந்திய அரசின் இவ்வதிரடி நடவடிக்கையினால் போராட்ட இயக்கங்கள் பெரிதும் அச்சமுற்றன. இந்நாடு கடத்தலை ரத்துச் செய்யுமாறும் தாம் புதுடில்லிக்கு வந்து பேச்சு வார்த்தை நடாத்தத் தயாராக விருப்பதாகவும் போராட்ட இயக்கங்கள் அறிவித்தன.

இந்நாடு கடத்தலுக்கு எதிராக போராட்ட இயக்கங்களினால் தமிழ் நாட்டில் ஊர்வலங்களும் கண்டனப் பேரணிகளும் நடாத்தப்பட்டன. இதனையடுத்து பல உறுதி மொழிகளின் அடிப் படையில் அன்டன் பாலசிங்கமும், சந்திரகாசனும் மீண்டும் இந்தியா வர அனுமதிக் கப்பட்டனர். இந்நாடு கடத்தல் நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் வரவேற்றது.

இதனிடையே திம்புவில் தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கை அரச பிரதிநிதிகள் புதுடில்லிக்கு அழைக்கப் பப்பட்டனர். அவர்களிடம் ரமேஸ் பண்டாரி தலைமையிலான இந்திய நிபுணர்கள் குழுவானால் தயாரிக்கப்பட்ட நகல் வரைபு கையளிக்கப்பட்டது. பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை இலங்கை அரசு மீறாது என்பதை உறுதிப்படுத்தும் முகமாக இலங்கை அரச தூதுக்குழுவின் தலைவர் எச்.டபிள்யு ஜெயவர்த்தனவின் கையொப்பம் பெற இந்தியா விரும்பியது. ஆனால் இதற்கு எச்.டபிள்யு ஜெயவர்த்தன முதலில் உடன்பட டவில்லை பின் நிலைமைகளைத் தெளிவாக விளக்கிய பின் கையொப் பமிட்டார். ஆனாலும் கொழும்பு திரும்பிய அவர் கையொப்பமிட தாம் பூரண ஒப்புதல் அழிக்கவில்லை எனக் கூறினார்.

தொடரும்....

### தமிழ் நாட்டில் இருந்து கொண்டு பிரபா குழுவினரை ஆதரிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார் தமிழக முதல்வர்

பிரபா குழுவினர் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பிராந்திய நாடுகளின் இறையான்மைக்கு பெரும் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். எனவே தமிழ் நாட்டில் இருந்து கொண்டு பிரபா குழுவை ஆதரிப்பவர்கள் அடக்கிப் பேசவேண்டும் இல்லை அதற்கான விளைவை அனுபவிக்க நேரிடும் என தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டில் அண்மையில் பிரபா குழுவுக்கு ஆதரவாக பேரணி ஒன்று நடாத்தப்பட்டமை குறித்து காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# சுதந்திரக் கிழக்கு நோக்கி...

பேராசிரியர் அறுகம்குட்டிப் போடியார் அவுஸ்திரேலியாவிலிருந்து (தொடர் 08)



இந்த நதிகள் அற்ற யாழ்ப்பாணம் உப்பை விடுத்து காலப்போக்கில் ஆழ்கிணற்று நீரை மூலதனமாக கொள்ளத் தொடங்கியது. கிணற்று நீருடாக உற்பத்தி செய்யப்படத் தொடங்கிய உப உணவுப்பொருட்கள் யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மெல்ல மெல்ல உருக்கொண்டது. இதுவே 15 ம் நூற்றாண்டுவரை அதாவது ஐரோப்பியரின் வருகைவரை யாழ்பாணத்தின் யதார்த்தமாகும். இலங்கையின் இந்த யாழ்ப்பாணம் தவிர்ந்த அனேகமாக எல்லாப் பிரதேசங்களும் நதிகளாலும் ஆறுகளால் நீர்வளமும் நிலவளமும் பெற்றிருந்தன. இயற்கையின் வஞ்சனை காரணமாக இவ்வளங்களை பெற்றிருக்காத யாழ்ப்பாணத்து மக்கள் கிடைக்கக் கூடிய எதையும் வாழ்வின் ஆதாரமாக பற்றிக்கொள்ளும் கருசனை வாய்க்கப் பெற்றமை இதன் பொருட்டேயாகும்.

இந்நிலையில்தான் நாடுபிடித்துவந்த அன்னியரின் வருகை எமது நாட்டினுடைய அரசியலில் மட்டுமல்ல சமூக பொருளாதார கட்டமைப்புகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அவையனைத்தும் முழுஅளவிலான இலங்கையருக்கு பாதகமான அம்சங்களையே பெருமளவில் ஏற்படுத்தியிருந்தாலும் யாழ்ப்பாணத்தவருக்கு இந்த அன்னியரின் வருகை பெரும் வரப்பிரசாதமாய் அமைந்தது. காலணித்துவ ஆட்சியாளர்களின் நவீன அரசியல் செயற்பாடுகளும் நீதி, நிர்வாக சேவைகளும் பெருந்தோட்டத் துறையினூடு விரிவடைந்த போக்குவரத்து, தபால்சேவை போன்றவைகளும் அறிமுகப்படுத்திய உத்தியோகங்கள் யாழ்ப்பாண மக்களை கவர்ந்தது. அவ்வுத்தியோகங்களினூடு வந்த ஆங்கிலத்தின் அறிமுகமும் வெள்ளையரை நோக்கி யாழ்ப்பாணத்தை அதிகம் கவர்ந்திழுத்தது. ஆதிக்க மொழி என்கின்ற எவ்வித கூச்சமும் இன்றி ஆங்கிலத்தைக் கற்று அதனூடு வெள்ளையனுக்கு தேவையாற்ற ஒரு பெருங்கூட்டத்தையே இந்த யாழ்ப்பாணம் மிக விரைவில் உருவாக்கிக் கொடுத்தது. உப்பில் இருந்து உப உணவுக்கு வளர்ச்சி யடைந்திருந்த யாழ்ப்பாணம் தன் வாழ்வின் ஜீவாதாரமாக இந்த ஆங்கிலக் கல்வியை இறுகப்பிடித்துக் கொள்ள தவறவில்லை.

பெருந்தோட்டத் துறையின் மேற்பார்வையார்களாகவும் நீதிநிர்வாகத் துறையின் அடிமட்ட உதவியாளர்களாகவும் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு கைகட்டி சேவை புரிந்த இவர்கள் காலப்போக்கில் நிர்வாகத் தேர்ச்சி பெற்ற உத்தியோ கத்தர்களாகவும், அரச அதிகாரிகளாகவும், ஆசிரியர்களாகவும் இலங்கை எங்கும் வியாபித்தனர். இந்த போக்கு ஆட்சியாளர்களிடம் சம்பளம் பெறும் கணிசமான ஒரு கூட்டத்தினராக யாழ்ப்பாணத்தவரை அடையாளம் காட்டியது. இலங்கையின் மூலை முடுக்குகள் எங்கும் இன்னும் சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகள் வரையும் கூட இவர்கள் வெள்ளையருக்கான சேவை உழைப்பாளர்களாக பரந்துபட்டு வாழ்ந்தனர். இதன் காரணமாக கிணற்று நீருக்குள் இருந்த இவர்களது பொருளாதாரம் மணியோடர் பொருளாதாரமாக மிளிர்ந்தது. கூடவே வெள்ளை சட்டை உத்தேியோகஸ்தர்கள் என்கின்ற சமூக அந்தஸ்த்தும் கைவரப்பெற்றது.

இந்த உத்தியோகத்தர்களின் சமூக பரம்பலே யாழ்ப்பாணத்தில் ஒரு மத்தியதர வர்க்கத்தின் தோற்றத்துக்கு வித்திட்டது. வெள்ளை ஆதிக்கத்தின் பாதுகாவலராக தம் வாழ்வைத் தொடங்கிய இவ்வர்க்கத்தினரே படிப்படியாக இலங்கையருக்கான அரசியல் போக்குகளை நிர்ணயிப்பவர்களாகவும் உருவாகினர். படிப்பறிவு, பணம், அந்தஸ்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இலங்கை மக்களுக்கான அரசியல் கோபுரத்தை வெள்ளயைர் அத்திவாரம் இட்டனர். ஆகவேதான் இந்த அத்திவாரம் ஆனது யாழ்ப்பாணத்திலேயே கட்டப்பட முடிந்தது. அங்கிருந்து உருவான அரசியல்வாதிகளே இலங்கையின் முதல் தலைமுறை அரசியல் தலைவர்களாகவும் இலங்கை அரசியலில் போக்கை தீர்மானிக்கும் சக்தி பெற்றவர்களாகவும் பரிணமித்தனர். இலங்கையின் சிங்கள மக்கள் இடத்திலும் இதுபோன்றதொரு மத்தியதரவர்க்கம் உ,ருவாகியிருந்தது. அங்கு ராஜ பரம்பரையினர் என தம்மைச் சொல்லிக்கொள்ளும் கொவிகம எனப்படுகின்ற ஒருவித சமூக அந்தஸ்துகொண்ட பிரிவினரே மேற்படி மத்தியதர வர்க்கமாக உருவாகியிருந்தனர். இவர்கள் சிங்களவராய் இருந்தபோழுதும் கராவ, சாலக என்கின்ற சாதிப்பிரிவினரான சிங்களவரை தம்மிலும் கீழானவர் களாகவே கணித்து வந்தனர்.

இப்போக்கானது இந்தியாவில் இருந்து எண்ணில் அடங்காத சாதிப்பிரிவுகளை யாழ்ப்பாணத்திலும் இறக்குமதி செய்து வைத்திருந்த சமூகத்தினுடைய சூழலுக்கு ஒத்துப்போவதாய் இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து மத்தியதர வர்க்கமாக பரிணமித்து இருந்த வர்களும் அச்சமூகத்தில் காணப்பட்ட சாதிப்பிரிவில் உயர் குழாத்தினரான வேளாளா சமூகத்தினரே என்பதனால் தமிழ் சிங்கள இனவேறுபாடற்று ஒரு உயர் வர்க்கக் கூட்டுக்கு நல்ல வாய்ப்பினை இச்சூழல் ஏற்படுத்தி யிருந்தது. இந்த வகையில் தமிழ் - சிங்கள உயர்வர்க்க கூட்டின் பிரதிநிதியான சேர்.பொன்.இராமநாதன் எனும் யாழ்ப்பாணத்தவர் வெள்ளை யரிடையே பெருமதிப்பைப் பெற்றிருந்தார். ஆங்கிலேயருக்கு மிக நெருங்கிய விசுவாசியான இவர் 1911 ம் ஆண்டு படித்த இலங்கையருக்கான முதல் செனட்சபை உறுப்பினர் ஆகும் வாய்ப்பை பெற்றார். கல்வியறிவு பெற்றவர்களுக்கும் சொத்துரிமை கொண்ட தனவந்தர்களுக்கு மட்டுமே அந்நிலையில் வாக்களிக்கும் தகுதி இருந்தது. ஆதலால் மொத்த சனத்தொகையில் சுமார் 4 வீதம்மான மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே இந்த வாய்ப்பை பெற்றிருந்தனர்.

இவ்வகையில் அரசியல் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் அதிகாரம் கொண்டவர்கள் தமிழ் - சிங்கள வேறுபாடுகள் எதையும் கொண்டிருக்கவில்லை. இனவேறு பாடுகளை தாண்டிய உயர்தட்டு வர்க்க ஒற்றுமையே இந்த இரு சமூகங்களின் பிரதிநிதிகளிடம் காணப்பட்டது. 1911ம்ஆண்டு தேர்வில் சேர்.பொன்.இராமநாதன் தெரிவு செய்யப்பட்டமை பற்றி அவ்வேளை கவனர் ஆக இருந்த சேர்.கியு.கிளிபார்ட் கூறுகையில் "படித்த இலங்கையரை தேர்ந்தெடுப்பதில் தமிழர் சிங்களவர் என்ற இனவேறுபாடு இல்லாமல் தமிழர் உயர் சாதியினரும் சிங்கள உயர்சாதியினரும் சேர்ந்த ஓர் உயர் சாதியினரையே தெரிவுதெய்தார்கள்" என தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. இதற்கு கைமாறாகவே 1915 ல் கொழும்பில் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம்கள் கலவரத்தில் பேரினவாதம் செய்யப்பட்டவிதத்தை முழுமையாக மறைத்து லண்டன் வரை சென்று முஸ்லிம்கள் மீது காடைத்தனம் புரிந்த சிங்களவர்களின் விடுதலைக்காக வாதாடினார் சேர்.பொன்.இராமநாதன். அதற்காகவே அவரை தேரில் வைத்து இழுத்து சிங்களவர்கள் குதூகலித்தனர். இவ்விதம் உயர்தட்டு வர்க்க ஒற்றுமையில் சிங்கள தலைமைகளுடன் யாழ்ப்பாண தலைமைகள் விரலும் சதையுமாக இணைந் திருந்தனர். 1917 ம் ஆண்டு தேர்விலும் இது மேலும் உறுதியானது கரையோர சிங்களவரான மாக்கஸ் பெர்னாண்டோ என்பவரை விடுத்து தமிழராய் ஆனபோதும் வெள்ளாள சமூகத்தை சேர்ந்தவரான சேர்.பொன்.இராமநாதனையே சிங்களவரும் சேர்ந்து தெரிவு செய்தனர்.

1919 இல் உருவான இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராக யாழ்ப்பாண தமிழரான சேர்.பொன். அருணாசலம் என்பவர் தெரிவானார். ஆனாலும் இன்னிலையை சுதந்திரத்தை நோக்கிய சீர்திருத்தங்களும், மாற்றங்களும் தொடர்ந்து அனுமதிக்கவில்லை. இலங்கை முழுக்க தமது ஆதிக்கத்தை பேணிவந்த யாழ்ப்பாண மத்தியவர்க்கத்தினரின் எதிர் கால அந்தஸ்தை அரசியல் மாற்றங்கள் கேள்விக் குறியாக்கியது. அது வரை காலமும் இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார கட்டுமானங்களில் நிரம்பியிருந்த யாழ்ப்பாணத்தவரின் செல்வாக்குகளை தொடர்ந்துவந்த காலங்களிலும் காப்பாற்றி கொள்ளும் எத்தனிப்போடு அன்றைய அதிகார ருசி கொண்ட தலைமைகள் முன்னெடுத்த நகர்வுகளே யாழ்ப்பாண அடிப் படைவாதத்தின் தோற்றுவாய் ஆகும்.

**யாழ்ப்பாண அடிப்படை வாதத்தின் அருமையான கட்டுகதை தமிழீழம்**

1920 ம் ஆண்டுவரை அரசியல் அதிகாரம் குறிப்பிட்ட ஒரு சிலரிடையே மட்டுமே மட்டுப படுத்தப்பட்டிருந்தது. எனினும் 1920 ன் பின்னர் ஏற்பட்ட மனிங் சீர்திருத்தம் கொண்டுவந்த மாற்றங்கள் இனவாரியான ஒதுக்கீட்டை மக்கள் பிரதிநி தித்துவத்திற்கு வழங்கியது. அதனூடாக அரசியல் உரிமைகள் பொதுமக்களுக்கு விரிவுபடுத் தப்பட்டது.

(தொடரும்......)

## போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு சுவிட்சர்லாந்து மற்றும் நியூசிலாந்து நாட்டவர்களை இணைப்பது குறித்து ஆலோசனை

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாட்டுப் பிரதிநிதிகள் விலகியதையடுத்து ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்திற்கு சுவிட்சர்லாந்து மற்றும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களை ஈடுபடுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.மொத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வெளியேறியிருப்பதனால் கிழக்கில் போர்நிறுத்த நடவடிக்கைகள் பெயரளவிலேயே இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் சுவிற்சர்லாந்து மற்றும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களை போர்நிறுத்த கண்காணிப்பாளர்களாக கடமையில் ஈடுபடுத்தாவிடில் போர்நிறுத்தத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக போர்நிறுத்த உடன்படிக்கையை திருத்தி புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்படும் என நோர்வே தூதரக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

## நோயாளர் காவு வாகனம் மீது எறிகணைத் தாக்குதல், ஒருவர் பலி



திருகோணமலையில் நோயாளர் காவு வாகனம் மீது நடாத்திய எறிகணை வீச்சுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மூதூர்-மட்டக்களப்பு வீதியில் பச்சனூர் அருகாமையில் 64 ஆம் மைல் கட்டையில் 05.08.06 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இச்சம்பவம் நடந்துள்ளது. மூதூரிலிருந்து திருகோணமலைக்கு நோயாளர் காவு வாகனம் சென்று கொண்டிருந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

**மூதூர் மக்கள்....** (5ம் பக்கத் தொடர்ச்சி)
கொடூரங்களும் ஓராயிரம். படையினருக்கும் பிரபா குழுவினருக்குமிடையே முதூர் இறங்கு துறையில் கடும் மோதல் இடம்பெற்றதனால் முதூர் முஸ்லிம் மக்களினால் இறங்கு துறையினூடா வெளியேற முடியவில்லை. இதனால் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாகவே வெளியேற வேண்டிய நிர்ப்பந்தமான நிலை உருவானது.

ஆயிரக் கணக்கான முதூர் முஸ்லிம் மக்கள் உயிரைப் பாதுகாக்க பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியினூடா வெளியேறும் சந்தர்ப்பத்தில் அப்பகுதியில் திடீர் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்திய பிரபா குழுவினர் அங்கு முகமூடி அணிந்த இருவரை அழைத்து வந்து அவர்கள் முன்னால் முதூர்ப் பகுதி இளைஞர்களை வரிசையாக அணிவகுத்து நிற்கச் சொல்லி அதில் முகமூடி அணிந்த நபர்கள் அடையாளங் கட்டிய இளைஞர்கள் பிரபா குழுவினரால் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கி முனையில் வேறோர் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு சுமார் 150 தொடக்கம் 220 வரையிலான இளைஞர்கள் பிரபா குழுவினரால் துப்பாக்கி முனையில் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களின் நிலைமை என்னவென்று இதுவரை தெரியவில்லை.

இது மட்டுமன்றி வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் மூதூர் முஸ்லிம் மக்கள் உச்சி வெயிலில் நடு வீதியில் முழங்காலிடப்பட்ட நிலையில் நிற்க வைக்கப்பட்டு விசாரணை எனும் பெயரில் அடியும், உதையும் பிரபா குழுவினரால் தாராளமாகவே வழங்கப்பட்டுள்ளது. குடிப்பதற்குத் தண்ணீர் கூட கொடுக்கப்படவில்லை. காயப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி கூட அளிக்கப்படவில்லை. பல மைல் தூரம் வெறுங் காலில் நடக்குமாறு வற்புறுத்தப்பட்டதாகவும் பிரபா குழுவின் கொடுமைகளைச் சந்தித்த மக்கள் கண்ணீர் மல்க கூறுகின்றனர்.

இதனைவிட முஸ்லிம் மக்கள் வெளியேற அவர்களின் வீடுகளுக்குள் புகுந்து பிரபா குழுவினரால் பணம், நகை, பெறுமதிவாய்ந்த பொருட்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பிரபா குழுவின் தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்களின் அவலம் தொடர் கதையாகி வருகிறது. அம் மக்களுக்கான அடிப்படை வசதி கூட அங்கு இல்லை. இதே வேளை பலர் இன்னும் உறவுகளைக் காணாது தேடி அலைந்து வருகின்றனர். அவர்கள் இருக்கின்றார்களா இல்லையா என்று கூடத் தெரியவில்லை. இம் மக்களின் விடயத்தில் அரசாங்கம் மேற்கொள்ளப் போகும் உறுதியான நடவடிக்கைதான் கிழக்கில் தொடர்ந்தும் பிரபா குழுவின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையிலிருந்து மக்களைப் பாதுகாக்கப் போகின்றது. மக்களைக் கொன்றொழிக்கும் திட்டத்துடன் பாரிய காரியமாற்றும் ஒரு பயங்கரவாத அமைப்புடன் தொடர்ந்தும் சமாதான மொழி பேசுவது எவ்வளவு தூரம் விவேகமானது என்பது தெரியவில்லை.

இடம் பெயர்ந்துள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களைப் பூரண பாதுகாப்புடன் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்துவதுதான் பயங்கரவாதத்திற்கு அரசாங்கம் கொடுக்கப் போகும் முதல் அடியாகும்.

# மூதூர் தாக்குல்களில் புலிகளின் தோல்வி புலிகளில் இருந்து எதனால் கருணா அம்மான் விலகினார் என்பதை வெளிப்படுத்துவதற்கான உகந்த நேரம் இதுதான்



மூதூரில் புலிகளின் படுதோல்வியானது. கடந்த வருட பிற்பகுதியில் இருந்து அவர்கள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அடைந்து வரும் தோல்விகளின் அதிகரிப்பை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் சென்று உள்ளது மூதூரில் புலிகள் அடைந்த படு தோல்வி நிலையானது அவர்களை மிக நீண்டகாலத்திற்கு குழப்பத்தில் ஆழ்த்தும் இது மூதூர் தோல்வியை தொடர்ந்து புலிகள் இழந்த நம்பகத் தன்மையை ஈடு செய்யும் வகையீல் சில புதிய துணிகரமான திட்டங்களில் அவர்கள் ஈடுபட முயலலாம்.

மூதூரில் இடம் பெற்ற அனர்த்தமானது. புலம்பெயர் சமூகத்தில். உள்ள புலிகளுக்கு நிதி உதவி வழங்கும் தமிழர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தும். பல வருடங்களாக ஒரு யுத்தத்திற்கு நாம் உதவியுள்ளோம் என்பதை எண்ணி கோபமடைந்திருப்பர். மூதூர் அனர்த்தத்தை தொடர்ந்து ஏற்படும் தோல்விகள் ஆனது புலிகளின் பொரளதாரத்தை எதிர் காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தெளிவு புலிகளின் தலைவர் கருணா அம்மானின் பிளவின் முன் சவால் விடப்பட முடியாத அதிகாரத்தை அனுபவித்து வந்திருந்தார். ஆனால் இப்போது தனது அதிகாரத்தை காப்பாற்றிக் கெள்ள வேண்டியதானதொரு ஆபத்தான சூழ் நிலையில் நிச்சயமாக இருப்பார் புலிகளின் ஊடகத்தில் மூதூர் பிரச்சணையுடன் நான்காம் கட்ட ஈழப்போர் தொடங்கி விட்டதாக பிரச்சாரங்கள் எல்லாம் மேற் கொள்ளப்பட்டு புலிகள் அடைந்த தேல்விகள் ஆனது புலம் பெயர் சமூகத்தின் மத்தியில் இருக்கும் ஆதரவாளர்களுக்கு இனியும் சகித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ள முடியாது இருக்கும்.

தங்களது வெற்றிகரமான தக்குதல்களை அடுத்து தாம் தாக்குதல் நடவடிக்கைகளில் இருந்து விலகிக் கொணடதாக புலிகள் தமது மூதூர் தோல்விகளை காட்டினர் புலம் பேர் சமூகத்தின் மத்தியில் உள்ள தமிழர்களின் புலிகளின் குரல்களாக ஒலிப்பவர்கள் இந்த தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாது வாய் அடைத்து போயினர். உடனடியாக அந்தச் செய்தியை வெற்றிகரமாக தாக்குதல்களை புலிகள் நிறைவேற்றியதாகக் கூறினர். சர்வதேசத்தின் கருத்தை சமாதானப் படுத்தும் வகையில் தந்திரமாக விலகிக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டது.

புலிகள் கடத்த காலங்ஙளில் பல தோல்விகளை சந்தித்து வந்து உள்ளனர் இதில் முதலாவதாக 1991-ம் ஆண்டு ஆடி மாதம் ஆனையிறவு சமரில் அவர்கள் அடைத்த தேல்வி குறிப்பிடத்தக்க ஒன்றாகும் அப்போது பிரபாகரனுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்த மாத்தையா என அழைக்கபடும் மகேந்திரராஜா என்பவரின் தலைமையில் நடத்தப்பட்ட இத்தாக்குதல் புலிக்கு பாரிய அடியாக முடிவடைத்தது இராணுவத்தின் யுத்த தந்திர வியூகங்கள் வகுக்கும் தளத்தை பல வந்தமாக கைப்பற்றும் நோக்குடனேயே இலங்கை இராணு வத்துடனான போர் என்ற வடிவிலேயேஅக் தாக்குதலை பிரபாகரன் அக்கறையுடன் திட்டம் தீட்டினர். தரமற்ற தாக்குதல் திட்டத்தின் விளைவாக 564 புலி உறுப்பினர்கள் இறந்தனர் இந்த தோல்வியை தொடர்ந்து மாத்தையாவும் 300 போரளிகளைக் கொண்ட இவருடைய படையும் புலிகளின் சித்திரவதை மரண முகாங்களுக்கு இந்திய புலனாய்வின் முகவாரக செயற்பட்டனர் என்ற குற்ற சாட்டின் பெயரில் அனுப்பிவைக்கப்பட்டனர்.

அதன் பிற்பாடு 2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் பிரபாகரன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருந்த கேணல் கருணா அம்மானை அழைத்து ஆனையிறவை கைப்பற்றுவதற்கான திட்டங்களை வழங்கினார் அந்த அளவுப் பாரிய தாக்குதலை தலைமை தாங்கி நடாத் தக் கூடிய உண்மையான தகுதிகள் கருணா அம்மானுக்கு உள்ளதாக அவர் கருதினார் கருணா அம்மானுக்கு பிரபாகரனினால் கொடுக்கப்பட்ட திட்டமானது அவரால் மாத்தையாவுக்கு கொடுத்த தோல்வி யடைந்த திட்டத்தில் இருந்து பெரிய அளவில் வித்தியாசம் இருக்கவில்லை பிரபாகரனால் தரப்பட்ட இத் திட்டத்தினை அமுல்ப்படுத்தினால் இன்னும் மொருதேல்வியையே சந்திக்க நேரிடுமென உணர்ந்த கருணா அம்மான் குறைந்தளவு போரளிகளின் இழப்புடன் வெற்றியீட்டுவதற்கு இத் திட்டம் சாத்தியப்படக் கூடிய தொன்றல்ல என தலைவரிடம் கூறினார் இத் தாக்குதலை தலைமை தாங்கி நடத்துவதற்குரிய சகல பொறுப்புக்களையும் தன்னிடம் ஒப்படைக்குமாறும் முடிவில் தான் வெற்றியுடன் திரும்பி வருவதாகவும் உறுதி கூறினார் ஆனையிறவு முகாமை பல வழிகளால் சென்று சுற்றி வளைத்து தாக்குதல் மேற்கொள்ளும் திட்டம் உள்ளடங்கலாக கருணா அம்மானுடைய ஆலேசனை திட்டத்தை செவிமடுத்த பிரபாகரன் அதற்கு இசைந்து தாக்குதலை நடத்துவதற்கான முழுப் பொறுப்பையும் கேணல் கருணா அம்மானிடம் ஒப்படைத்தார்.

கருணா அம்மானுக்கு சந்தேகத்துக்கு இடம் இன்றி சுகந்திரம் வழங்கப்பட்டு இருந்தது கருணா அம்மான் ஆனையிறவை கைப்பற்றவதற்கான நடவடிக்கையை அக்கறையுடன் திட்டமிட்டார். சித்திரை மாதம் 23திகதி 2000ஆண்டு அன்று இலங்கை இராணுவத்தினருக்கு பாரிய உயிர் சேதங்கள் எற்படுத்தப்பட்டடு கருணா அம்மானால் இராணுவ முகாமை கைப்பற்ற கூடியதாக இருந்தது. இந்த இராணுவ நடவடிக்கையில் புலிகளின் 188 உறுப்பினர்கள் மரணம் அடைந்தனர். ஆனையிறவு கைப்பற்றபட்டதை தொடர்ந்து களைத்து போன புலிகள்; சொர்னத்துக்கும் பாணுவுக்கும் உரித்தாக இருந்த புலிகளின் மற்றைய பிரிவினரிடம் பொறுப்பு எடுக்கும்படு கூறிவிட்டு ஒய்வு பெற்றனார். இந்த கட்டளைகள் வந்ததையடுத்து மகிழ்சியால் தூண்டப்பட்ட போராளிகள் கட்டுப்பாடு இன்றி இலங்கை இராணுவத்தினால் விட்டு செல்லப்பட்ட பொருட்களை சூறையாடினர் ஜெனிவா உடன்பாடடின்கீழ் வேண்டிக் கொள்ளப் பட்டதற்கு இணங்க யுத்த பணயக் கைதிகளை நிர்வகிக்கும் விடய்த்தில் கைது செய்யப்படும் இராணுவத்தினார் மற்றும், மருத்துவ உத்தியேகஸ்தர்கள் கூட இவ்வறு நடத்தப்படுவது இல்லை.

புலிகளில் தற்போது உள்ள இராணுவத் தலைவர்கள் யுத்தத்தால் ஏற்பட்ட களைப்பினாலும் வயதின் காரனமாக எற்பட்ட உடல் உபாதைகளாலும் உடல் வலிமையற்று காணப்படுகின்றனர் என்பது வெளிப் படையானதொரு விடையாமாகும். இது அவர்களுக்கு மோசமான பாதிப்பை எற்படுத்தி உள்ளது புலிகள் மக்களில் தங்கியுள்ளனார். இப்போது ம்க்கள் மத்தியில் புலிகளுக்கு ஜனாபிமானம் பாரிய அளவில் அருகிவருகின்றது. கருணா அம்மானின் பிரிவு பிரபாகரனுக்கு பாரிய ஒரு வெற்றிடத்தை உருவாக்கி உள்ளது இவ் இடைவெளியை நிரப்பவதற்கு கணிசமான அளவு காலத்திற்கு பிரபாகரனுக்கு கஷ்டமாகவே இருக்கும்.

புலிகன் ஆனையிறவு வெற்றியை தொடர்ந்து கருணா அம்மான் பிரபாகரனிடம் யத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமாதன தீர்வின் மூலம் இப் பிரச்சனைக்கு ஓர் தீர்வைக்காண்போம் எனக் கூறினார் இதை தொடர்ந்து உருவக்கப்பட்ட கசப்பான சூழ் நிலையே கருணா அம்மானின் பிளவிற்கு வழிகோலியது. நேரடியாகவே இதை ஏற்க மறுத்து அக்கருத்தை உதறிதள்ளிய பிரபாகரன் இந்த யுத்த நிறத்த ஒப்பந்தமானது புலிகள் ஓர் பாரிய யுத்தத்திற்கு தம்மை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கான ஓர் தற்காலிக வேளையே ஐந்து அண்டு காலத்தில் முழு அளவிலான ஒரு யுத்தம் ஆரம்பமாகும் என கருணா அம்மானிடம் கூறினார் பிரபாகரனின் கருத்துக்களால் கருணா அம்மான் அடைந்த அதிருப்தியே அவரை புலிகளில் இருந்து துரிதமாக வெளியேற வைத்தது

ஆனையிறவில் கருணா அம்மானின் வெற்றியை தொடர்த்து பிரபாகரனுக்கு கருணா அம்மானில் நம்பிக்கையை உருவாக்கியது இது புலிகளில் பொறுப்பாளர்களுக்கு பொறமை உணர்வை ஏற்படுத்தியதுடன் தீவிரக்கருத்து வேற்றுமைகளையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியது. தமிழ் செல்வன், பொட்டு, கரிகாலன் உற்பட இன்னும் பலர் கருணா அம்மானை அவமதிக்கும் பிரச்சாரங்களை ஆரம்பித்தனர். புலிகளின் பொறுப்பாளர்களை கொண்ட கருணா அம்மானுக்கு எதிரான இவ் அமைப்பு புலிகளின் உள்ள கருணா அம்மானை அவமதிக்கும் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து இருந்தது கருணா அம்மானுக்கு பலவிதமான குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் உருவாக்கினார்கள். யுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் கிழக்கில் இருந்து புதிய போராளிகளை படைக்கு சேர்பதில் இருந்து தயக்கம் காட்டினார் இது கருணா அம்மானுக்கு எதிரான சக்திகள் தொடர்ந்தும் அவரை பற்றி குறை கூறுவதற்கு உதவியாக அமைந்த மற்றும் ஒரு பாரிய ஆத்திரம் அடையச் செய்யும் விடயமாக இருந்தது வட பகுதியை சேர்ந்த இராணுவத்தலைவர்கள் திட்டமிட்ட முறையில் கருணா அம்மான் சமூதாயத்துக்கு ஆபத்தை எற்படுத்த கூடிய ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்களை கொண்டுள்ளார் என பிரச்சாரம் செய்தனர். இப் பிரச்சாரத்துக்கு புலனாய்வுதுறை தலைவர் பொட்டு தலைமைதாங்கி இறுதியாக கருணா அம்மானை புலிகளிலிருந்து வெளியேற்றுவதில் வெற்றிகண்டனர்.

கருணா அம்மானுக்கு எதிரான புலிகளின் சேனாதிக் குழுவில் உருவாக்கப்பட்ட கசப்பான சந்தர்ப்பமானது கருணா அம்மான் தனது சொந்த வழியை பார்பதற்கு வழியமைத்தது கருணா அம்மானிற்கு எதிரான குழுவின் அழுத்தங்களுக்கு பிரபாகரனும் உட்பட்டு கருணா அம்மான் மீது அழுத்தங்களை போட ஆரம்பித்தார். கருணா அம்மான் புலிகளில் இருந்து வெளியேறுவதற்கு சில நாட்களுக்கு முன் கிழக்கில் புலிகளின் போராளிகளின் பெற்றோருக்கு தன்னால் முகம் கொடுக்க முடியாது உள்ளது என பிரபாகரனிடம் கூறியிருந்த போதும் பிரபாகரன் கிழக்கில் இருந்து 1000 புதிய போராளிகளை படையில் சேர்க்கும்படி உத்தரவு இட்டார். புலிகளில் இருந்து வெளியேறுவதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் வந்துவிட்டது எனகருணா அம்மான் உணர்ந்தார். கட்டளைகளை செவிமடுத்த கருணா அம்மான் கிழக்கிற்கு திரும்புவதற்கு தீர்மனித்தார் இவர் கிழக்கு திரும்பிய பின் சூரிய கடவுள் பிரபா ஒரு நாள் கருணா அம்மானுடன் தொடர்பு கொண்டு படை சேர்புக்கான கட்டளைகளின் நிலை பற்றி விசாத்தார் அது தான் இரண்டு தலைவர்களுக்கு இடையில் பரிமாறப்பட்ட இறுதி வார்த்தைகளாக இருந்தன. கருணா அம்மான் எத்த விதமான பயமும் இல்லாமல் கிழக்கில் பிரபாகரனையே வந்து ஆட்சேர்ப்பு செய்து கொள்ளும்மாறு வெறுப்புடன் கூறினார்.

கருணா அம்மானின் இந்த சூடான வார்தைகள் பிரபாகரனுக்கு நடுக்கத்தை கொடுத்தது. கண் மூடித்தனமான முடிவுகளை எடுக்கும் தனது அந்தரங்க சபையை பிரபாகரன்



உடனடியாகக் கூட்டினார் அதன்பின் நடந்தவை அனைத்தும் கருணா அம்மானுக்கு எதிராகத் திட்டமிட்டமுறையில் நடத்தபட்ட தாக்குதலாகும். புலிகளின் ஊடகம் கருணா அம்மானை அவர் ஓர் பெண்பித்தன் வஞ்சகன் விசுவாசம் இல்லாதவன் இவ்வாறு பலவாறு கட்டுக்கடங்காமல் விமர்சித்தது தமிழ் நெட். அதன் ஆசிரியரான தராக்கி என்றழைக்கப்படும் சிவராமிடம் கருணா அம்மானைப் பற்றி கூடாதவாறு எழுதும் படி பிரபாகன் விசேடமாக அறிவுறுத்தல்கள் வழங்கினார். இந்தப் பொன்னான வாய்ப்பை புலிகளுடனான தனது பங்கை அதிகரித்துக்கொள்ளச் செய்வதற்கு தராக்கி அதனைப் பயன்படுத்தினார். கருணா அம்மானை வன்மையாகக் கண்டித்தும் மேலும் தமிழ்ச் செல்வனாலும், பொட்டனாலும் கருணா அம்மானிற்கு எதிராக சித்தரித்து வழங்கப்பட்ட குற்றச் சாட்டுக்களையும் சேர்த்து ஒரு தொடராக கொழும்பு சண்டே டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரித்தார். தராக்கியின் தலையீட்டால் புலிகளின் ஏனைய ஊடகங்கள் கருணா அம்மானைப் பற்றி அவதூறு கூறி பரப்பப்பட்ட கதைகள் நம்பகத்தன்மையைப் பெற்றன.

இதன் விளைவாக மக்கள் பார்வையில் கருணா அம்மான் மீது இருந்த நம்பிக்கை வெகுவாக பாதிக்கப்பட்டது. தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் (ரிஎம்விபி) என அவரால் அமைக்கபட்ட இயக்கத்தின் மூலம் மறுபடியும் முன்னிலைக்கு வந்து பிரபாவால் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட நடவடிக் கைகளில் தோல்விகளை தழுவிக் கொண்டவற்றில் மூதூர் தோல்வியும் ஓர் உதாரணமாகும். தற்போது சூரியத் தெய்வமான பிரபாகரனின் மனதில் இந்த ஓர் அதிர்ச்சி நிலவிகொண்டிருக்கின்றது பிரபா தமிழ் மக்களுடன் குறிப்பாக திறமைசாலிகளுடன் விரோதத்தை ஏற்படுத்திக் கொண்டதால் அவர் வீழ்ச்சியை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றார் அதுமட்டுமன்றி இந்த மூதூர் நகரத்தையே பிடிக்க முடியாத அவரால். எவ்வாறு தமிழீழ தாயக்கைக் கைப்பற்றி ஈழப் பிரகடனம் செய்வதாகக் கூறிய வாக்கை நிறைவேற்றமுடியும்? இதைப் புலம்பெயர் நிதி உதவியாளர்கள் அதிர்சியுடனும் அச்சத்துடனும் பார்த்துகொண்டிருக்கின்றனர். ●

### மூதூர் தாக்குதலில் படுகாயமடைந்த பிரபா குழுவின் உறுப்பினர்களுக்காக பிரபா குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக இரத்தம் சேகரிக்கப்படுகின்றது.

மூதூரில் இடம்பெற்ற உக்கிர மோதலில் பிரபா குழுவின் தரப்பில் சுமார் 150இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக கதிரவெளி, வாகரைப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிக சிகிச்சையளிக்க பெருமளவு இரத்தம் தேவைப்படுவதனால் பிரபா குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரை, கதிரவெளிப் பகுதி மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக இரத்தம் சேகரிக்கின்றனர் பிரபா குழுவினர். அப்பகுதியிலுள்ள மக்களை பலாத்காரமாக சிகிச்சையளிக்கும் இடத்திற்கு பிடித்துச் செல்லும் பிரபா குழுவினர் அவர்களின் இரத்த மாதிரியைப் பரிசோதித்து விட்டு பெருமளவில் இரத்தம் சேகரிப்பதாக அங்குள்ள மக்கள் மூலம் தெரியவருகின்றது. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளதுடன், அங்கிருந்து வெளியேற முயற்சிக்கின்ற போதிலும் அது சாத்தியப் படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யுத்த களமாக மத்திய கிழக்கு
# இஸ்ரேலைக் கட்டுப்படுத்துவது யார்?

தொடர் 02

எழுதுவது உத்தமன்




மத்திய கிழக்கில் இஸ்ரேல் தொடர்ந்தும் ஆக்கிரமிப்புக் கனவுடனேயே இருந்து வந்துள்ளது என்பதற்கு 1948ம் ஆண்டின் பின் மத்திய கிழக்கில் மூண்ட யுத்த களங்கள் சான்று பகர்கின்றன. சர்வதேச ரீதியில் இஸ்ரேலுக்கு எதிராக எழுந்த எல்லைமீறிய எதிர்ப்புக்கள் காரணமாக இஸ்ரேல் தனது கனவுகளை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது.

ஆனால் ஜூலை 12ம் திகதி ஹிஸ்புல்லாப் போராளிகள் இஸ்ரேலிய இரு கொமாண்டோ வீரர்களை பிடித்துச் சென்றதுடன் மீண்டும் தனது ஆக்கிரமிப்புப் பணியை தூசு தட்டுகின்றது இஸ்ரேல். ஹிஸ்புல்லாக்களை இலக்குவைத்தே இஸ்ரேல் தாக்குவதாக அது விளக்கம் கொடுக்கின்றபோதும் இதுவரை இஸ்ரேலியத் தாக்குதலில் கொல்லப்பட்ட 700 லெபனானியர்களில் ஹிஸ்புல்லாப் போராளிகளின் எண்ணிக்கை 40றகும் குறைவானதே என்றார் மத்திய கிழக்கிற்கான பி.பி.சி யின் செய்தியாளர்.

ஹிஸ்புல்லாக்களின் நிலைகள் என்று கூறி இஸ்ரேல் தாக்குதல் நடாத்துவது லெபனானின் உட்கட்டமைப்பு நிலைகள் மீதே. தொலைத்தொடர்பு நிலையங்கள், சக்திவள நிலையங்கள், பாலங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், குடியிருப்புக்களே இஸ்ரேலின் தாக்குதலில் அழிவடைந்துள்ளன. லெபனானின் உட்கட்டமைப்பு நிலைகள் மீது இஸ்ரேல் தெரியாமல் குண்டு போட்டதாகக் கூற முடியாது. இஸ்ரேலும் அவ்வாறு கூறவில்லை.

ஆக இஸ்ரேலின் தாக்குதல் ஹிஸ்புல்லாக்களுக்கு எதிரானது எனும் போர்வையில் அதனையும் தாண்டி மிக ஆழமான இலக்குடன் நடாத்தப்படுவதாக கருத வேண்டியுள்ளது. அவ் ஆழமான இலக்கு இஸ்ரேலை மட்டும் திருப்திப் படுத்துவதா? இல்லை அதனையும் தாண்டி இஸ்ரேலைக் கட்டுப்படுத்தும் வல்லமை படைத்த இன்னொருவரின் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யவா? என்பதுதான் சர்வதேச அரசியல் அரங்கில் இன்றுள்ள முக்கிய விவாதமாகும்.

இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் தொடுத்து 12 நாட்கள் கடந்த பின் 480 பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்தான் உலக வல்லரசு அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் மத்திய கிழக்கு விவகாரத்தில் தலையிட்டது. ஜீ8 உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் இஸ்ரேலின் தாக்குதலை நியாயப்படுத்தியதுடன் இது தொடர்பாக ஜீ8 மாநாடு இஸ்ரேலைக் கண்டித்து வெளியிட இருந்த அறிக்கையைக் கூட வெளியிட விடாமல் தடுத்தார்.

இந்நிலையில் இஸ்ரேலின் லெபனான் மீதான விமானத் தாக்குதல் எல்லைகளைத் தாண்டி பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. உலகிலிருந்து கண்டனக் குரல்கள் ஓங்கி எழ ஆரம்பித்தன. இதனைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் கொண்டலீசா ரைஸ் சைப்பிரசின் ஊடாக மத்திய கிழக்கிற்குச் சென்றார்.

ரைசின் லெபனான் வருகையை முன்னிட்டு இஸ்ரேல் தனது விசுவாசத்தைக் காட்டும் முகமாக இரு தினங்கள் லெபனான் தலைநகர் பெய்ரூட் மீதான தாக்குதலை இடைநிறுத்தியது. சைப்பிரஸில் இருந்து இராணுவ ஹெலியில் இஸரேலினால் சிதைக்கப்பட்ட பெய்ரூட் விமான நிலையத்தை அடைந்து அங்கிருந்து கடும் இராணுவப் பாதுகாப்புடன் லெபனான் பிரதமர் அலுவலகத்தை நோக்கி விரைந்தார்.

ரைசிடம் லெபனானியத் தலைவர்கள் உடனடி யுத்த நிறுத்தத்தின் அவசியத்தை எடுத்துக்கூறியதுடன், அழிவுகளைத் தடுத்து நிறுத்துமாறும் கெஞ்சிக் கேட்டனர். சாட்டுப்போக்கான பதில்களைக் கூறி அவர்களை சமாளித்துவிட்டு றைஸ் இஸ்ரேலியத் தலைவர்களைச் சந்திப்பதற்காக ஜெருசலேம் சென்றார்.

ரைஸ் மத்திய கிழக்கில் யுத்தநிறுத்தம் பற்றிப் பேசும்போது அமெரிக்கா திரைமறைவில் இன்னொரு நடவடிக்கையில் ஈடுபட்டது. மிகவும் ரகசியமாக மேற்கொள்ளப்பட்ட அந்நிகழ்வு சில முறையற்ற நடைமுறைகள் காரணமாக வெளி உலகிற்குத் தெரியவந்தது.

ரைஸ் மத்திய கிழக்கிலிருந்துகொண்டு லெபனானில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு கவலை தெரிவித்துக் கொண்டிருக்கும் அதேநேரம் கட்டாரில் மத்திய கிழக்கிற்கான அமெரிக்க இராணுவத் தலைமையகத்தில் இருந்து அதி பயங்கரமான பங்கர் பாஸ்டர் குண்டுகளும், நவீன ஏவுகணைகளும் இஸ்ரேலுக்கு நாகரீகமாக அனுப்பி வைக்கப்பட்டன.

அமெரிக்காவின் இந்நடவடிக்கை அதன் இரட்டைத் தன்மையை வெளிப் படுத்தியதுடன் இஸ்ரேலின் தாக்குதலின் மூலம் அமெரிக்காவும் பயனடையப் போகின்றதா எனும் வலுவான சந்தேகத்தைத் தோற்றுவித்தது. ரைஸின் முதற்கட்ட மத்திய கிழக்கு விஜயத்தில் எதனையும் சாதிக்க முடியவில்லை. இதனிடையே இத்தாலியின் ரோம் நகரில் ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரசன்னத்தில் இஸ்ரேலின் லெபனான் மீதான தாக்குதலை ஆராயும் அவசரக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. இதில் கலந்துகொள்ள ரைஸ் ஜெருசலேமிலிருந்து ரோம் நோக்கிப் பயணமானார்.

ரோமில் இஸ்ரேல் உடனடியாக தனது தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என அனைத்து நாடுகளும் வலியுறுத்தியபோதும் அமெரிக்கா இதற்கு உடன்படவில்லை. இஸ்ரேல் தனது இலக்கை அடைந்த பின்பே தாக்குதலை நிறுத்துமென அமெரிக்கா வலியுறுத்த ரோம் மாநாடு இணக்கப்பாடின்றி முடிவுக்கு வந்தது.

இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்துமாறு கோர கூட்டப்பட்ட ரோம் மாநாடு இணக்கப்பாடின்றி முடிவடைந்ததை இஸ்ரேலிய நீதியமைச்சர் லெபனான் மீதான தாக்குதலுக்கு உலகம் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகத் தெரிவித்தார். இந்நிலையில் லெபனானுக்கு அதிகாரமுடைய சர்வதேச அமைதிப்படை நிலைகொள்ளச் செய்யப்படவேண்டுமெனும் கருத்தை ஐநா பொதுச் செயலாளர் கொபி அனானும் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயரும் வலியுறுத்தினர்.

சர்வதேச அமைதிகாக்கும் படை லெபனான் வரும்வரை தமது தாக்குதல்கள் தொடரும் என்ற இஸ்ரேலின் நிலைப்பாட்டிற்கும் சர்வதேச அமைதிப்படை தொடர்பான கருத்தொற்றுமை ஏற்படுவதை இழுத்தடிக்கும் அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்குமிடையே பெரும் ஒற்றுமை ஒன்று உள்ளது. அவ்வொற்றுமை இத்தாக்குதல் லெபனானைக் கடந்து மத்திய கிழக்கில் ஆழமான இலக்கொன்றை குறிவைத்துள்ளதை நிரூபணம் செய்கின்றது.

இந்நிலையில் அமெரிக்காவின் பின்புல ஆதரவுள்ள மததையில் இஸ்ரேலின் கண்மூடித்தனமான தாக்குதலில் அண்மைய இரு நிகழ்வுகள் சர்வதேச ரீதியிலும் அரபு உலகிலும் பெரும் கோப உணர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது. ஒன்று லெபனானின் தென்பகுதியில் நிலைகொண்டுள்ள ஐநா கண்காணிப்பாளர்களின் மீதான இஸ்ரேலின் தாக்குதல். இதில் நான்கு ஐநா கண்காணிப்பாளர்கள் கொல்லப்பட்டனர். இரண்டாவது லெபனானின் கானா நகர்மீது இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 34 சிறுவர்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டது.

ஐநா. கண்காணிப்பாளர்கள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து கொண்டலீசா ரைஸ் மீண்டும் மத்திய கிழக்கு விரைந்தார். அவர் ஜெருசலேம் இருக்கும்போதுதான் கானா நகர் மீதான தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டது. இதனால் யுத்தநிறுத்தம் ஏற்படாமல் அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளரை சந்திக்கப் போவதில்லையென லெபனான் பிரதமர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து 48 மணிநேரம் அரைகுறையாக விமானத் தாக்குதல்களை நிறுத்துவதாக இஸ்ரேல் தெரிவித்தது. ஆனாலும் இக்காலப் பகுதியில் இஸ்ரேல் தரைவழித் தாக்குதல்களை மேற்கொண்டது.

லெபனான் தாக்குதல் மூலம் மத்திய கிழக்கில் அமெரிக்காவும், இஸ்ரேலும் அடையமுயலும் ஆழமான இலக்கு என்னவென்பதுதான் சர்வதேச அரசியல் அரங்கில் இன்றைய மில்லியன் டொலர் வினா!



2001 செப்டம்பர் 11ந் திகதியின் பின் அமெரிக்கா உலகில் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை முன்னெடுத்து வருகின்றது. இதில் அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலகமான பென்டகனினால் தயாரிக்கப்பட்ட அமெரிக்காவின் ஏகாதிபத்தியத் தன்மைக்கும் வல்லரசு நிலைக்கும் எதிர்காலத்தில் போட்டியாக மாறலாமென கணிக்கப்பட்ட நாடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அந்நாடுகள் அமெரிக்காவினால் இலக்கு வைக்கப் பட்டன. செப்டம்பர் 11ந் திகதியின் பின் அமெரிக்க ஜனாதிபதி ஆற்றிய மிக முக்கிய உரையொன்றில் பயங்கரவாதத்தின் அச்சாணி நாடுகளென ஈரான், வடகொரியா, சிரியா ஆகிய நாடுகளை வர்ணித்தார். இதன் மறுபக்கம் என்னவெனில் அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரலை ஏற்றுக்கொள்ளாத இந்நாடுகள் இராணுவ ரீதியில் வளர்ச்சியடைந்து எதிர்காலத்தில் அமெரிக்காவிற்கு சவாலாக மாறலாம் என்பதே.

வடகொரியாவும், ஈரானும் அணு ஆயுத வல்லமையை பெற்றுவிட்டதாக கூறப்படுகின்றது. இதனைவிட இந்நாடுகளில் நீண்டதூர ஏவுகணைகள் உள்ளன. இவ்விரு நாடுகளையும் பொறுத்தவரையில் உடனடி ஆபத்தான நாடு ஈரான்தான் என்பது அமெரிக்க அதிபரின் கணிப்பு. ஏனெனில் ஈரானின் அமைவிடம் பெருகிவரும் அதன் ஆற்றல் என்பவை இதற்கான காரணமாகும். இதனைவிட சர்வதேச அழுத்தத்தையும் மீறி ஈரான் முன்னெடுக்கும் அணு ஆயுதத் திட்டம் போன்ற மத்திய கிழக்கின் ஆழமான இலக்கிற்கு ஈரானை உட்படுத்தியிருத்தலாகும்.

தொடரும்.....

**தண்ணீருக்காய் ஒரு....** (04ம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்க முடியாது. மாவிலாறு அணைக்கட்டு விவகாரத்தினால் பெரும் இழப்புக்கள் ஏற்பட இதற்கு ஏதேனும் ஒரு வகையில் பதிலடி கொடுக்க வேண்டும் எனவும், அதனைவிட இப்பதிலடி நடவடிக்கையைப் பயன்படுத்தி தமது நீண்ட நாள் திட்டமான முஸ்லிம் மக்கள் மீதான இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ளலாமென பிரபா குழுவின் தலைமை திட்டமிட்டுத்தான் மூதூர் மீதான தாக்குதலைத் தொடுத்தனர்.

மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்தது என்பது போல மூதூர் மீதான தாக்குதலின்போதும் பலத்த இழப்பு பிரபா குழுவினருக்கு ஏற்பட்டது. தொடர்ந்து என்ன செய்வது என பிரபா குழுவின் தலைமை ஒரு முடிவெடுக்க முடியாமல் திணற நிலைமை அவர்களின் கைமீறிப் போனதை மட்டும் உணர முடிந்தது. இந்நிலையில்தான் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பவரின் இலங்கை விஜயம் அமைந்தது. தொடர்ந்தும் அணைக்கட்டை மூடி வைத்திருந்தால் அது தமது இறுதி முடிவுக்கே வழிவகுக்குமென பிரபா குழுவின் தலைமை நன்கு உணர்ந்திருந்ததினால் நோர்வேயின் மூலம் அணைக்கட்டைத் திறந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாமென பிரபா குழுவின் தலைமை முடிவு செய்தது.

அதனால்தான் ஜோன் ஹன்சன் பவரை கிளிநொச்சியில் சந்திப்பது போல சந்தித்து அவருக்காகத்தான் அணைக்கட்டைத் திறந்தோம் எனும் புதுக் கதையை கட்டவிழ்த்து விட்டனர் தமிழ்ச் செல்வனும், எழிலனும். இந்நிலையில் அவசர அவசரமாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனை அழைத்துக்கொண்டு எழிலன் அணை இருக்கும் பகுதியை நோக்கி செல்லும் சமயம் இலங்கை இராணுவத்தினர் அணைக்கட்டின் இடது பகுதியைக் கைப்பற்றியிருந்தனர். அணைக்கட்டுப் பகுதிக்கு அவர்கள் செல்வது குறித்து அரசாங்கத்திற்கு தெரிவிக்காததனால் நிலைமை மோசமானது. அதனால் அன்று பிரபா குழுவினரால் அணைக்கட்டைத் திறக்க முடியவில்லை.

இனியும் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தமது தலைக்கு ஆபத்து என உணர்ந்த பிரபா குழு சத்தமில்லாமல் யாருக்கும் தெரியாமல் அணைக்கட்டைத் திறந்திருக்கலாம். அல்லது அரச படைகளே தாக்குதல் மேற்கொண்டு அணைக்கட்டைத் திறந்திருக்கலாம்.

எது எப்படி இருப்பினும் நீருக்காக நடந்த ஒரு யுத்தத்தில் பிரபா குழு பலமாய் மூக்குடைக்கப்பட்டுள்ளது.

# புலிகள் போடும் மாறுவேஷம்

கிழக்கான்

திருமலை என்றும் மூவின மக்களின் பிறப்பிடம்
திசைகள் போட்டு பிரித்துப் பார்ப்பது சுயநலம்
குடிக்கும் நீரைக் கொடுக்க மறுக்கும் புலியிடம்
கும்பிடு போட்டு குட்டு வாங்கும் தமிழினம்

கதிரவன் ஒளியும் காற்றும் மழையும் இலவசம்
கடவுள் கொடுத்த கொடையை யாரும் தன்வசம்
மறித்து வைத்து மந்திரமோதி காட்டுவது வேஷம்
மக்களுக்குத் தெரியும்தானே வன்னிப் புலிகளின் துவேஷம்

விளையும் நிலத்தில் ஈரம்கசியப் பாயும் மாவில ஆறு
விடுதலைப் புலிக்கு மூடிமறைக்க கொடுத்தது யாரு
மக்கள் வயிற்றில் அடிப்பதுதானா விடுதலையின் பேரு
மனிதநேயம் இருக்கும் நெஞ்சம் மறுக்குமா கூறு

விளையும் பயிர்கள் முளைத்துவர நீரைத் திறப்பதற்கு
விளைத்த மக்கள் பசித்திருக்க வீராப்புப் பேச்செதற்கு
ஏர் பூட்டும் மக்களிடம் நீங்கள் வீரனாய் ஆவதற்கு
ஏழைகளின் வயிறுதானா கிடைத்தது மிதிப்பதற்கு

வளர்ந்துவிட்ட நெற்கதிரில் வர்க்கபேதம் ஏது
வயிற்றுப் பசிக்கு உண்ணும்போது கடவுள் பெயரை ஓது
விடுதலைதான் இதுவும் என்று ஆற்றை மூடும்போது
விதைத்தவனும் மனிதன் என்று நீ நினைப்பது எப்போது

வடகிழக்கு சாதிவெறி வன்னிப் புலிக்கு ஏராளம்
வடக்கைவிட விழுந்த தலை கிழக்கில் தாராளம்
ஒருவகையில் இதுவுமொரு அடிமைப் போராட்டம்
ஒருபோதும் உணர்ந்ததில்லை இந்தத் தமிழர் கூட்டம்

கொள்கையில்லாத கொலைவெறிக் கும்பலொன்று
கொத்தடிமையாக்குவதை தொழிலாகக் கொண்டு
அடக்குமுறையால் தமிழர்களை அடக்கிக் கொண்டு
அட்டகாசம் செய்கிறது கிழக்கில் இருந்துகொண்டு

மூன்றுகட்டப் போரும் முதலில் கிழகிலே வெடித்தது
மூதூரைத் தளமாக்கி இன்று மீண்டும் உயிரைக் குடிக்குது
அப்பாவி மக்களுக்கு அங்கு அநியாயம் நடக்குது
அதி உயர் பீடம் கூட அறிக்கைகளோடு நிறுத்துது.

ஹிட்லருக்குத் தம்பியவன் இங்கு மனிதர்களைக்
கொல்வதற்கு
கிழக்கு மக்கள் ரத்தங்களை ருசிபார்த்துக் குடிப்பதற்கு
அரசாங்கம் இவன்மேலே அனுதாபம் பார்ப்பதற்கு
அர்த்தம் புரியவில்லை இன்னும் அடங்கிப் போவதற்கு


**www.athirady.com**

சகோதரத்துவத்துக்காகவும், சமத்துவத்திற்காகவும்,
ஜனநாயகத்திற்காகவும், சமுதாயத்தின் நன்மைக்காகவும் பாடுபடும்
அதிரடி இணையத்தளம்
உண்மைத் தகவல்களை அதிரடியாக மக்களுக்கு
தெரியப்படுத்துவதுடன் எவர் தவறிழைத்தாலும் அதனை
அதிரடியாக மக்களுக்கு அம்பலப்படுத்தும்
அதிரடி இணையத்தளம்


அன்புடன் வாசகர்களுக்கு

உள்நாட்டிலும், புலம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான எமது வாசகர்களின் நீண்டநாள் வேண்டுகோளுக்கிணங்க அடுத்துவரும் தமிழ் அலை இதழில் கேள்வி பதில் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் கொள்கைகள், இலக்குகள், சமகால அரசியல் தொடர்பான எமது பார்வை போன்றவற்றின் வாசகர்களின் வினாக்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி


தமிழ் அலை கேள்வி பதில்
மீனகம்
இல,39 கோவிந்தன் வீதி
மட்டக்களப்பு

மின்னஞ்சல் முகவரி tamilalainews@yahoo.com








தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைச் செயலகம் அண்மையில் கொழும்பில் திறந்து வைக்கப்பட்ட சமயம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் மும்மதப் பெரியார்களும் கலந்துகொண்டபோது


உண்மைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது
உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி www.tamilalai.org
எமது பத்திரிகை மற்றும் இணையத்தள தொடர்புகளுக்கும்
விமர்சனங்களுக்கும் tamilalainews@yahoo.com